இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# தொழிலாளர் பாதை

3/-

மாதமிரு இதழ் - 450 1994 ஜுலை 29 வெள்ளிக்கிழமை

University of Jaffna Sri Lanka
RECEIVED
994-10-5
Periodicals Division
Library

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்
பொதுத் தேர்தல் பிரச்சார உரை

**ரூபவாஹினி:**
1994 ஆகஸ்ட் 10 - இரவு 7.00-7.15

**ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்:**
1994 ஆகஸ்ட் 7 இரவு 7.00-7.15

# யூ.என்.பி.-பொதுஜன முன்னணி வம்பளப்பு விஞ்ஞாபனங்கள் வெளிவந்துள்ளன

ஐக்கிய தேசியக் கட்சியையும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியையும் (பொதுஜன ஐக்கிய முன்னணி) சேர்ந்த ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகள் நாட்டின் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதாக வாக்குறுதி அளித்த வண்ணம் நாட்டை வலம் வந்து கொண்டுள்ளார்கள். இலங்கை முதலாளிகளுக்கு திடீரென ஏதோ பெரும் பொக்கீசம் அகப்பட்டுள்ளது போல் இது [illegible]ள்ளது. முதலாளித்துவ பத்திரிகைப் பைத்தியங்கள் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் மூளையை வீங்க வைக்க யூ.என்.பி.-பொதுஜன முன்னணி முதலாளித்துவக் கட்சிகளின் தலைவர்களது கதையளப்புக்களையும், 'நிபுணர்'களின் கருத்துக்களையும் அள்ளி வீசிவருகின்றன. சமசமாஜ-கம்யூனிச-நவசமசமாஜ-இ.தொ.கா. கட்சிகளும், தொழிற் சங்க அமைப்புக்களும் பொதுமக்களுக்கு நித்திரைக் குளிசை ஊட்டுவதற்கு யூ.என்.பி., சி.ல.சு.க., பாசிச அமைப்புக்களுடன் ஒன்றிணைந்து கொண்டுள்ளன.

முதலாளிகளின் இந்த பச்சைப் பொய்களால் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் ஏமாந்து போய்விடக் கூடாது. 17 ஆண்டுகளாக இந்நாட்டை ஆட்சி செய்த யூ.என்.பி. அரசாங்கம் இப்போது புதிய வாக்குறுதிகளை வழங்குவதன் மூலம் தலைநீட்டியுள்ள சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டு பொதுமக்களை 2000 ஆண்டுகளுக்கு இட்டுச் செல்வதாகக் கூறுகின்றது. "தேர்தல் விஞ்ஞாபனம்" என்ற பேரில் அடிக்கடி முதலாளித்துவப் பத்திரிகைகள் மூலம் அறிக்கைகளை வெளியிட்டு வந்த யூ.என்.பி. இப்போது இவை எல்லாவற்றையும் கூட்டிக் கட்டிய இன்னும் ஒன்றை வெளியிட்டுள்ளது.

## இனவாத யுத்தம்

இலங்கையில் "பயங்கரவாதப் பிரச்சினை"யே தவிர தேசியப் பிரச்சினை கிடையாது எனக் கூறிய ஜனாதிபதி விஜேதுங்கவின் கட்சி, இப்போது மக்கள் அதை மறந்திருப்பார்கள் என்ற நினைப்பில் போலும் அதிகாரத்தைப் பரவலாக்குவதன் மூலம் நீதியான தீர்வு வழங்குவதாகக் கூறும் "பரணக்கோட்"டையே "புதிய விஞ்ஞாபனத்தில்" சேர்த்துக் கொண்டுள்ளது. இனவாத யுத்தத்தின் மூலம் வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் இரத்தத்தை உறிஞ்சிக் குடித்ததோடு, நாடு முழுவதையும் யுத்த பயங்கரத்தினுள் தொடர்ந்தும் தள்ளியுள்ள வேலைத்திட்டம் என்ன வகையைச் சேர்ந்த தீர்வு? இதை யூ.என்.பி. தெளிவுபடுத்தவில்லை. இலஞ்சம், ஊழல், மோசடிகள், சட்ட மீறல்கள், அரசியல்வாதிகளுக்கு சிறப்புச் சலுகைகள் வழங்கல் என்பவற்றை ஒழித்துக் கட்டுவதாக யூ.என்.பி. காரர்கள் வாக்குறுதியளிப்பது இவற்றில் குளித்து எழும்பியபடியேயாகும். இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, ரூபா. 1500/-க்கு குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு உணவு முத்திரை, வீடில்லாப் பிரச்சினைக்கு தீர்வு என்றெல்லாம் யூ.என்.பி. தேர்தல் விஞ்ஞாபனம் கூறிக் கொள்கின்றது. ஆனால் இத்தனை காலமும் இவை எல்லாம் செய்யாதது ஏன் என்பது பற்றி மூச்சும் இல்லை.

இத்தனை தேர்தல் குண்டுகளுடனான தயாரிப்பும் எதற்கு என்பதை தேர்தல் விஞ்ஞாபனத்தில் தன்னும் மூடி மழுப்ப யூ.என்.பி.யால் முடியாது போயுள்ளது. நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குப் பொருத்தமான ஆட்சி முறையெனத் திணிக்கப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதி முறை - அதாவது அரைச் சர்வாதிகாரி முறை - தொடர்ந்தும் நீடிக்கப்படும் எனக் குறிப்பிடும் யூ.என்.பி. தேர்தல் விஞ்ஞாபனம், நாட்டின் சகல மாகாணங்களிலும் சுதந்திர வர்த்தக வலயங்கள் நிறுவப்படும் எனச் சத்தியப் பிரமாணம் செய்கின்றது. இதன் அர்த்தம் என்ன? அனைத்துலகக் கம்பனிகாரர்களின் இலாப வெறியை நாட்டின் மூலை முடுக்கு எங்கணும் எடுத்துச் செல்லவும், தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை காட்டுமிராண்டித் தனமான முறையில் சுரண்டித் தள்ளும் சர்வாதிகார ஆட்சி முறையை ஸ்தாபிதம் செய்யவும் யூ.என்.பி. தொழிற்பட்டு வருகின்றது 'என்பதேயாகும்.

## ஏட்டிக்குப் போட்டி

சமசமாஜ, ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சிகள் நுழைந்து கொண்டுள்ள சி.ல.சு.க.வின் முதலாளித்துவ பொதுஜன ஐக்கிய முன்னணியானது யூ.என்.பி. காரர்களுடன் ஏட்டிக்குப் போட்டியாக மக்களுக்குச் சகலதையும் அள்ளித் தருவதாக வாக்களித்துள்ளது. யூ.என்.பி. மீது பொது மக்கள் கொண்டுள்ள ஆத்திரத்தையும் வெறுப்பையும் பயன்படுத்தி ஆட்சியைக் கைப்பற்றுவதன் மூலம் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் மீது தாக்குதல் நடாத்த பொதுஜன ஐக்கிய முன்னணி தருணம் பார்த்துள்ளது. "வறுமையில் வாடும் எமது மக்களை அதிலிருந்து விடுவிக்கும் "தேசிய வேலைத்திட்டத்தை" முன்வைப்பதாயும் "அனைத்தும் வழங்கும் சமுதாயத்தை" நிர்மாணிப்பதாயும், "ஜனநாயகத்தை" ஸ்தாபிதம் செய்து லஞ்சம், ஊழல், மோசடிகள் இல்லாத சமுதாயத்தைச் சிருஷ்டிப்பதாயும் கூறும் ஒரு தொகை கதையளப்புக்களால் பொ.ஐ.மு. தேர்தல் விஞ்ஞாபனம் நிறைந்து போயுள்ளது. இந்தக் கதையளப்புக்கள், வாய் வீச்சுக்கள் மூலம் தாம் ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் எடுபிடிகளாகத் தொழிற்படுகின்றோம் என்பதை இந்த முதலாளித்துவ முன்னணியால் மூடிமறைக்க முடியாது போயுள்ளது.

## முதலாளித்துவ முன்னணி

"தொழில்நுட்பம், விஞ்ஞான அபிவிருத்தி, முதலீடுகள், முகாமைத்துவம், நிதி, தொழில்வாய்ப்பு போன்ற துறைகளில் துரித அபிவிருத்தியை உருவாக்கும் பொருட்டு உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சகல வசதிகளும் வழங்கப்படும்" எனக் கூறும் முதலாளித்துவ முன்னணி, மறுபுறத்தில் இலவசக் கல்வி, சுகாதாரம் உட்பட்ட சகல நலன்புரி சேவைகளையும் தனியார் மயமாக்கம் மூலம் தகர்த்து எறிவதாக ஏகாதிபத்தியவாதிகளுக்கு சைகை காட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தின் மூலம் முன்சென்றுள்ளது.

ஆளும் வர்க்கம் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை 'மாடுகள்' எனக் கருதுவதாக லியொன் ட்ரொட்ஸ்கி ஒரு முறை குறிப்பிட்டார். பொதுமக்களை ஏமாற்ற முதலாளிகள் கடைகெட்ட பொய்களை அள்ளி வீசி வருகின்றனர். முதலாளிகளின் நெருக்கடி எவ்வளவுக்கு எவ்வளவு அதிகரிக்கின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு அவர்களின் மோசடிக் கதையளப்புக்களும் உக்கிரம் அடைகின்றது; நீண்டு செல்கின்றது. எந்த முதலாளித்துவக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் பொதுமக்களின் பிரமாண்டமான பிரச்சினைகளில் ஒன்றைத்தன்னும் தீர்த்து வைக்கும் சக்தி அவர்களுக்குக் கிடையவே கிடையாது என்பது வரலாற்று ரீதியில் நிரூபிக்கப் பட்டுள்ளது. அது மட்டுமன்றி இந்த யூ.என்.பி., பொதுஜன ஐக்கிய முன்னணி உள்ளடங்கலான முதலாளித்துவ கட்சிகளதும், முன்னணிகளதும் வேலைத் திட்டம் இந்த

12ம் பக்கம் பார்க்க



பு.க.க.வை தேர்தல் கருமங்களுக்கான ஒரு அங்கீகரிக்கப் பட்ட அரசியல் கட்சியாக தேர்தல் ஆணையாளர் பதிவு செய்ய மறுத்ததை எதிர்த்து இடம்பெற்றுவரும் கையொப்ப பிரச்சாரத்துக்கு ஆதரவு வழங்கும் வெலிமட கொடக்கும்புர பகுதி தொழிலாளர்கள்

## 1994 பொதுத் தேர்தல் பிரச்சாரம்

**பகிரங்க விரிவுரைகள்**

### 1994 பொதுத் தேர்தலும் தொழிலாளர் வர்க்க வேலைத்திட்டமும்

- ஆகஸ்ட் 2 பி.ப. 2 மணி
  வெலிமட சூரிய சினிமா மண்டபம்
- ஆகஸ்ட் 2 பி.ப. 5 மணி
  அரசாங்க லிகிதர் சேவை சங்க மண்டபம், கொழும்பு-2.
- ஆகஸ்ட் 6 பி.ப. 2 மணி பதுளை YMBA மண்டபம்
- ஆகஸ்ட் 8 மாலை 3 மணி
  வெலிமட சூரிய சினிமா மண்டபம்

**பகிரங்க விரிவுரைகள்**

### 1994 பொதுத் தேர்தலும் பாசிச ஆபத்தும்


- ஆகஸ்ட் 5 மாலை 3 மணி
  பண்டாரவளை நகரசபை மண்டபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1994 பொதுத் தேர்தல்- புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக பிரச்சாரம்

நந்தன நன்னெத்தி, ஜீ.உதய பிரேம,
ஜீ.சேனாரத்ன

எதிர்வரும் பொதுத்தேர்தலில் பதுளை மாவட்டத்திற்கு தனது வேட்பாளர்களை நிறுத்தியுள்ள புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதத்துக்கான பிரச்சாரத்தினை ஜூலை முற்பகுதியில் இருந்து ஆரம்பித்தது. பு.க.க பதுளை மாவட்டத்தில் மட்டும் தேர்தலில் நின்ற போதிலும் அது வெளியிட்டுள்ள 'தேர்தல் விஞ்ஞாபனமும் வேலைத்திட்டமும்' என்ற நூலின் மூலம் தனது போராட்டத்தினை இந்நாட்டின் சகல பாகங்களிற்கும் விஸ்தரித்துள்ளது.



பு. க. க அங்கீகரிக்கப்பட்ட கட்சியென பதிவுசெய்ய மறுத்தமைக்கு எதிரான பெட்டிசனில் கையொப்பமிடும் வெவஸ்ச தோட்டத் தொழிலாளர்கள்

இந்தப் பிரச்சார இயக்கத்தினை மிகவும் பலம் வாய்ந்த முறையில் முன்னெடுப்பதற்காக பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த பதுளை, பண்டாரவளை, வெலிமட நகரங்களில் மூன்று தேர்தல் அலுவலகங்களைப் பு.க.க திறந்துள்ளது. பு.க.க தமிழ், சிங்களப் பத்திரிகைகளான 'தொழிலாளர் பாதை' 'கம்கறு மாவத்த'வும் இத்தேர்தலையொட்டி வெளியிடப்பட்ட பு.க.க 'தேர்தல் விஞ்ஞாபனமும் வேலைத்திட்டமும்' என்ற நூலும் மற்றும் மார்க்சிசப் பிரசுரங்களும் இங்கு விற்பனையாகின்றன.

பு,க.க அங்கத்தவர்களும் ஆதரவாளர்களும் வீட்டுக்கு வீடு தோட்டத்துக்குத் தோட்டம் சென்று பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இப்பிராந்தியத்தினை சேர்ந்த தோட்டத் தொழிலாளர்களிடம் இருந்து புகக வின் பிரச்சார இயக்கத்துக்கு பேராதரவு கிட்டியுள்ளது. வெலிமட குறுப், டயரபா தோட்டம், அப்புத்தளை நீட்வூட் தோட்டம், பண்டாரவளை எஸ்லப் தோட்டம் போன்ற இடங்களில் பு.க.க நடாத்திய கூட்டங்களுக்கு வருகை தந்த தொழிலாளர்கள் பு.க.க நடாத்தும் கூட்டங்களுக்குத் தொடர்ந்தும் வருகை தருவதாக வாக்குறுதி அளித்ததோடு. தேர்தல் நிதிக்கும் உதவினர்.

பிரச்சாரம் ஆரம்பித்த முதல் மூன்று நாட்களில் பண்டாரவளை பகுதியில் 208 'கம்கறு மாவத்த'யும் 164 'தொழிலாளர் பாதை'யும் விற்பனையாகின. அத்தோடு தேர்தல் நிதிக்கு ரூபா.4569/- திரண்டது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினை தேர்தல் கருமங்களுக்கான ஒரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய தேர்தல் ஆணையாளர் மறுத்ததை எதிர்த்து ஆரம்பிக்கப்பட்டுள்ள 'கையொப்பம்' திரட்டும் இயக்கத்துக்கு ஆதரவாக 500 பேர் ஒப்பமிட்டுள்ளனர்.

## எஸ்லப் தோட்டம்

பு.க.க தேர்தல் பிரச்சார இயக்கத்தினர் சந்தித்த எஸ்லப் தோட்டத் தொழிலாளியான வி.சிவலிங்கம் எமது பிரச்சாரம் பற்றிக் கூறியதாவது: ''புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தேர்தலில் நிற்பதையிட்டு நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம். நாம் சகல அரசாங்கங்களையும் நியமித்து பார்த்தோம். தொழிற்சங்கங்கள் ஊடாக பேச்சுவார்த்தை நடாத்தினோம். அரசாங்கங்களாலும், தொழிற்சங்கங்களாலும் எமது பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்பது இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது.

''எங்களின் லயன் அறைகளைப் பாருங்கள். வீட்டினுள்ளும் முற்றம் போலவே மழைக்கு நனைகிறது. சாக்கடைகளின் அழுக்குகள் வீட்டினுள் பெருக்கெடுக்கிறது. தொழிற்சங்கங்கள் எவ்வளவுதான் பெரிதாக இருந்தாலும் அதனால் எமக்கு கிட்டுவது ஒன்றுமில்லை'' என்றார். பு.க.க,வை அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய மறுத்தமையை கண்டனம் செய்த அவர் பெட்டிசத்திலும் கையொப்பம் இட்டார்.

## பண்டாரவளை அமுனுதோவ

பு.க.க பெட்டிசத்தில் கையொப்பம் இட்ட பண்டாரவளை அமுனுதோவ கிராமப் பெண்மணியான அமராவதி பின்வருமாறு குறிப்பிட்டார்: ''இந்த அரசாங்கம் எனது கணவரை கூட்டுறவு சங்க வேலையில் இருந்து நீக்கியது. எமது மூன்று குழந்தைகளின் முத்திரை காட்டுக்களை வெட்டினார்கள். வாக்குக் கேட்டுவரும் கட்சிகளுக்கு இந்தப் பக்கத்திற்கே வர இடமளிக்க முடியாது.'' பு.க.க வேட்பாளர்களுக்கு வாக்களிப்பதாகக் குறிப்பிட்ட அமராவதி, தேர்தல் நிதிக்கும் ரூபா.10/- வழங்கினார்.

தமக்கு ஆபத்து ஏற்படலாம் எனக் கூறி பு.க.க கையொப்பம் சேகரிக்கும் பத்திரத்தில் ஆரம்பத்தில் கையொப்பம் வைக்க மறுத்த இப்பகுதி விவசாயி ஒருவர் பின்னர் அதில் கையொப்பம் வைக்க இணங்கினார். அதற்கு அவர் கூறிய காரணம் இதுதான்: ''இந்த அரசாங்கத்தினால் விவசாயிகள் நஞ்சு குடித்து சாக நேரிட்டது. பொது ஜன முன்னணியின் வேலைத் திட்டத்தில் எமக்கு நம்பிக்கை இல்லை. உயிர் போக உழைக்கும் எமக்கு எதுவுமே கிடையாது. தொழிலாளர் அரசாங்கத்தினால் இதைத் தீர்க்க முடிந்தால் அது நல்லது.''

## டயரபா தோட்டம்

ஜூலை 10ம் திகதி டயரபா தோட்டத்தில் எமது பிரச்சாரக் குழுவைச் சந்தித்த லலிதா பரமேஸ்வரி கூறியதாவது: ''அரசாங்கம் இத்தகைய ஒரு கட்சியை பதிவு செய்யவில்லை என்பதை நாம் இந்தப் பெட்டிசத்தினாலேயே அறிகின்றோம். அதில் கையொப்பம் இடுவது பெரிதும் முக்கியம். அப்போது தான் அதை எல்லோரும் அறிவர். உரிமைகளைப் பறிப்பதை அனைவரும் எதிர்க்க வேண்டும்.''

தொழில் இல்லாத யுவதியான சீதா லெட்சுமி பு.க.க பிரச்சார இயக்கத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்தார். ''எமக்கு அவசியப்படுவது தொழில் வழங்கும் அரசாங்கம்: இன்றுள்ளது போல் இன்னொரு அரசாங்கம் வந்து வேலையில்லை. இங்ஙனம் ஆட்களிடம் போய் பிரச்சனைகளை கலந்துரையாடும் கட்சியை பதிவு செய்யாதது பெரும் தவறு. அதை நான் எதிர்க்கின்றேன்.''

ஓய்வு பெற்ற பெண் தொழிலாளி ஒருவர் தோட்டங்களில் அடிப்படை வசதிகள் துளியளவும் இல்லாத நிலையை விபரிக்கையில் கூறியதாவது: ''இந்த லயன் அறைகளில் தண்ணீர் கிடையாது. கக்கூஸ் கிடையாது. மின்சாரம் இல்லை, இவை எல்லாம் தருவதாகத் தான் தொண்டமான தேர்தல் காலத்தில் வாக்குறுதி தருகிறார்கள். இத்தகைய பொய்யர்களால் எமக்கு பயன் இல்லை. நான் இந்தப் பெட்டிசத்தில் எம்மை ஏமாற்றும் ஏனையவர்களுக்கு எதிராக கையொப்பம் இடுகின்றேன்'' என்றார்.

## வெலிமட—லந்தேகம

வெலிமட லந்தேகமவைச் சேர்ந்த யட்டலேவல பகுதியில் பிரச்சாரம் செய்த போது பு.க.க தோழர்களுடன் பிரச்சனைகளை கலந்துரையாடிய ஆர்.எம். துனுகே என்ற வீட்டுப் பெண் கூறியதாவது: ''இந்தக் கட்சிகளாலும் அரசாங்கங்களாலும் எந்தவொரு பிரச்சனைக்கும் தீர்வு காண முடியாது. என்பதை எவரும் அறிவார்கள். ஏன் இந்த அரசாங்கம் ஒரு கட்சியின் பெயரைத் தன்னும் பதிவு செய்யவில்லை? கையொப்பம் இடுவது அதற்கு எதிராகவாகும்'' எனக் குறிப்பிட்டார்.

இதே பகுதியைச் சேர்ந்த மற்றொரு வீட்டுப் பெண் பின்வருமாறு கூறினார்: ''நாம் வாக்களிக்க ஒரு கட்சி இல்லாததால் புதியதொரு கட்சியை அமைப்பது முக்கியம். எனினும் இக் கட்சியின் பெயரை ஏன் பதிவு செய்யவில்லை. என்பது ஒரு பிரச்சனை இனவாதத்துக்கு எதிரான ஒரே கட்சியாதலால் நீங்கள் கூறுவதை நாம் அங்கீகரிக்கின்றோம். நாமும் இனவாதத்துக்கு எதிரானவர்கள் என்பதால் இதில் கையொப்பம் இடுகின்றோம்.'' என்றார். பு.க.க பிரச்சார குழுவிற்கு தேநீர் விருந்தளித்த அவர் பிரச்சார நிதிக்கும் ரூபா.15/- வழங்கினார்.

மாணவனான அஜித் இன்றைய முதலாளித்துவ அரசியல் கட்சிகளதும் இயக்கங்களதும் வங்குரோத்தைப் பற்றி விபரிக்கையில் கூறியதாவது: ''இன்றுள்ள கட்சிகளை அங்கீகரிக்க முடியாது. அவற்றால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாதது மட்டுமன்றி அவை இருந்த பிரச்சனைகளை இன்னமும் உக்கிரமாக்கியுள்ளன. இளைஞர்களின் பிரச்சினைகளை தீர்க்கும் வேலைத்திட்டத்தை ஜே. வீ. பி முன்வைக்கவில்லை. படுகொலைகளுக்கு அவர்களும் பொறுப்புச் சொல்ல வேண்டும்...''

அப்புத்தளைத் தோட்டத்தில் எமது பிரச்சாரக் குழுவினைச் சந்தித்த ஆர்.ராணி அம்மா என்ற தொழிலாளி ''இப் பிரச்சினைகளில் இருந்து விடுபட எமக்குப் புதிய கட்சி வேண்டும்.'' எனக் குறிப்பிட்டார். இதே தோட்டத்தைக் சேர்ந்த எஸ் பூரணம் தோட்டத் தனியார் மயமாக்கத்தினால் ஏற்பட்ட பேரழிவுகளைப் பற்றிக் குறிப்பிடுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்: ''கம்பனி மயமானதன் பின்னர் நான்கு நாட்களே வேலை கிடைக்கிறது. எமக்கு சாப்பிட வழியில்லை. உதவி மானியங்கள் எல்லாம் நீக்கப்பட்டு விட்டன. எல்லா யூனியன்காரர்களும் பொய்யர்கள். அவர்கள் எம்மைத் தேடுவதே கிடையாது'' என முறையிட்டார்.

ஜூலை 10ம் திகதி அப்புத்தளை தோட்டத்தில் எமது பெட்டிசத்தில் கையொப்பமிட்ட 56 வயதான வீரப்பா கவுண்டர் தேயிலை பக்டரியில் வேலை செய்த போது. 1976 டிசம்பர் 10ம் திகதி சேவையில் ஈடுபட்டிருந்த வேளையில் மேல் மாடியில் இருந்து நிலத்தில் வீழ்ந்து முதுகெலும்பு முறிந்து போயுள்ளார். அவருக்கு தொழில் இல்லாது போனதோடு நஷ்டஈடும் கிடைக்கவில்லை. இன்று தோட்டம் காசன்ஸ் அக்கிறோ சர்விசஸ் கம்பனியால் நிர்வகிக்கப்படுகின்றது. வீரப்பா கவுண்டர் இ.தொ.கா தலைமையின் துரோகம் பற்றி குறிப்பிடுகையில் ''நாம் இ,தொ.கா அங்கத்தவர்களாக இருந்தும் எதுவிதமான பயனும் இல்லை. எமக்கு விபத்து ஏற்பட்டதன் பின்னர் இந்தப் பக்கமும் பார்ப்பதில்லை'' என்றார்.



கடந்த ஜூலை 14ம் திகதி பண்டாரவளை புகக தேர்தல் அலுவலகத்துக்கு வருகை தந்த அப்புத்தளை தங்கமலை தோட்டத்தின் தொழிலாளர்கள் — ஆர்.முகன், ஆர்.வேலுசாமி, வீ.சுப்பம்மா, வீ.தனலெட்சுமி, கே.ஜயலஷ்மி, எஸ்.பலனி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிலாளர் பேராளர் மகாநாடு — ஜூன் 19

# பு.க.க அரசியல் அறிக்கை ஏகமனதாக நிறைவேறியது

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினாலும் இளம் சோசலிஸ்டுகள் இயக்கத்தினாலும் ஜூன் 19ம் திகதி கொழும்பு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்ட தொழிலாளர் பேராளர் மகாநாட்டில் தீவின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து சுமார் 100 தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்கள் கலந்து கொண்டனர். இதில் கைத்தொழில் தொழிலாளர், தோட்டத் தொழிலாளர், ஆசிரியர்கள், சுகாதார, கூட்டுறவு, வங்கி ஊழியர்கள், ஒடுக்கப்படும் விவசாயிகள் வேலையற்ற இளைஞர்கள், மாணவர்கள் என்போர் அடங்குவர்.

இம்மகாநாடு முக்கியமாக ''தேசியவாத துரோகத் தலைமைகளில் இருந்து பிரிவோம்!'' 'தொழிலாள வர்க்க அனைத்துலக ஐக்கியத்தை கட்டியெழுப்புவோம்!' 'ஏகாதிபத்தியச் சார்பு யூ.என்.பி அரசாங்கத்தை வெளியேற்று!, தொழிலாளர்—விவசாயிகள் அரசாங்கத்தை கட்டியெழுப்பு!, என்ற சுலோகங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது.



தொழிலாளர் பேராளர் மகாநாட்டில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினர்


பு.க.க மத்திய குழு உறுப்பினரும், 'கம்கறு மாவத்த' பிரதம ஆசிரியருமான கே.ரத்னாயக்க தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டின் அரசியல் அறிக்கையை பு.க.க. பொதுச் செயலாளர் விஜே டயஸ் சமர்ப்பித்தார். அரசியல் அறிக்கையைத் தொடர்ந்து மிகவும் பலம் வாய்ந்த முறையில் அரசியல் கலந்துரையாடல் இடம் பெற்றது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் பூண்ட இந்திய சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் செயலாளர் தோழர். அருண் குமாரினால் அனுப்பிவைக்கப்பட்டிருந்த நல்வாழ்த்துச் செய்தியை தோழர்.கே.ரத்னாயக்க கலந்துரையாடல்களுக்கு இடையே சபையில் வாசித்தார்.

கலந்துரையாடலைத் தொடர்ந்து பு.க.க பொதுச் செயலாளர் விஜே டயஸ் பதிலிறுத்துப் பேசியதோடு பு.க.க மத்திய குழு உறுப்பினரான தோழர். நந்த விக்கிரமசிங்க மகாநாட்டின் அரசியல் பிரேரணையைச் சமர்ப்பித்தார். இந்த அரசியல் அறிக்கை, பதிலுரை, அரசியல் பிரேரணை அனைத்தும் சபையோரால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

கடந்த காலத்தில் தொழிலாளர் வர்க்கம், ஒடுக்கப்படும் மக்களிடையே பு.க.க முன்னெடுத்த போராட்ட வரலாற்றைச் சித்தரிக்கும் கண்காட்சி மகாநாட்டின் ஒரு சிறப்பம்சமாக விளங்கியது. மகாநாட்டிற்கு வருகை தந்த தொழிலாளர்களும், இளைஞர்களும் கண்காட்சியை மிகுந்த அக்கறையுடனும் ஆர்வத்துடனும் தரிசித்ததைக் காணமுடிந்தது. இத்துடன் சோசலிசத் தொழிலாளர் கழகத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட வாழ்த்துச் செய்தியின் முக்கிய அம்சங்கள் பிரசுரமாகின்றன.

# இந்திய சோசலிச தொழிலாளர் கழக நல்லாசிகள்

கடந்த ஜூன் 19ம் திகதி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடாத்திய தொழிலாளர் பேராளர் மகாநாட்டிற்கு இந்திய ட்ரொட்ஸ்கிச அமைப்பான சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் செயலாளர் தோழர். அருண்குமார் அனுப்பிய வாழ்த்துச் செய்தியின் சுருக்கம்.



இந்திய .சோ.தொ.க- பொதுச் செயலாளர் தோழர்.அருண்குமார்

அன்பின் தோழர்களே,

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் பூண்ட சோசலிசத் தொழிலாளர் கழகம், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நடாத்தும் தொழிலாளர் பேராளர் மகாநாட்டுக்குப் புரட்சிகர ட்ரொட்ஸ்கிச நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

தோழர்களே, ஒடுக்கப்படும் மக்களே! உங்களின் போராட்டம் எமது போராட்டம். நாம் அனைவரும் அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஒரு பாகமாக எமது பொது எதிரியான முதலாளித்துவத்துக்கு எதிராக ஒரே யுத்தத்தில் ஈடுபட்டுள்ளோம். முதலாளித்துவ உற்பத்தியின் பூகோளமயமாக்கம் முன்னொரு போதும் இல்லாத விதத்தில் அல்லது இற்றைக்கு ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் கார்ள் மார்க்ஸ் தீர்க்கதரிசனமாகக் கண்ட விதத்தில் அனைத்துலக ஒருமைப்பாட்டுக்கான நடைமுறை வல்லமையை உலகத் தொழிலாளர் வர்க்கத்துக்குச் சிருஷ்டித்துக் கொடுத்துள்ளது. ஆனால் தொழிலாளர் இயக்கத்தின் மேல் தொடுக்கப்பட்டுள்ள எதிரி வர்க்க அழுத்தங்கள் பிரமாண்டமானதாய் இருப்பதால் சோசலிச அனைத்துலகவாதத்துக்கான நனவானதும், உறுதியானதுமான போராட்டம் அவசியமாகியுள்ளது.

ஆழமாகிவரும் உலக முதலாளித்துவ நெருக்கடியின் நிலைமையின் கீழ் முதலாளித்துவ ஜனநாயகம் நாற்றம் கண்டு, சிதறுண்டு போய்க் கொண்டுள்ளது. இத்தாலியில் சில்வியோ பேர்ளுஸ்கோனியின் வலதுசாரி அரசாங்கம் அமைக்கப்பட்டமையும், ஐரோப்பா பூராவும் வலதுசாரி பாசிச சக்திகள் மீண்டும் தலைநீட்டிக் கொண்டுள்ளமையும் இதைச் சுட்டிக் காட்டுகின்றது. உலகின் சகல முதலாளித்துவ ''ஜனநாயக'' ஆட்சிகளும் நாற்றம் கண்டு வரும் நிலைமையில் தொழிலாளர் வர்க்கத்திடமிருந்து அதிகமதிகமாக உபரி உழைப்பைச் சுரண்டிக் கொள்ளும் தீவிர வலதுசாரி எதிர்ப்புரட்சி சக்திகள் ஜனநாயக அரசுகள் என்ற வடிவில் பிராந்திய தனிச்சிறப்புரிமைவாதம் பக்கமும், பொனபாட்டிச சர்வாதிகாரம், இராணுவ சர்வாதிகாரம், பாசிசம் பக்கமும் திரும்பியுள்ளன.

எனினும் இந் நடைமுறைகள் தவிர்க்க முடியாத தொழிற்பாடுகள் அல்ல. அதனை வெற்றிகொள்ள தடையாக ஸ்டாலினிச, சீர்திருத்தவாத தொழிலாளர் அதிகாரத்துவங்கள் பலதசாப்தங்களாக வர்க்க உடனுழைப்பு மூலமும், முதலாளித்துவ உற்பத்தியின் பூகோளரீதியான ஒன்றிணைவின் நிலைமையின் கீழ் தமது பாரம்பரிய தேசிய சீர்திருத்தவாத வேலைத்திட்டங்களின் அடிப்படையில் பூகோளரீதியான ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களை [illegible] செய்வதில் உள்ள இயலாமையும் அதன் பெறுபேறாக முதலாளித்துவ அரசின் பிற்போக்கு கூறாக இந்த அமைப்புக்கள் பரிணாமம் அடைந்தமையும் உள்ளன.

உலக முதலாளித்துவத்தின் ஆழமடைந்துவரும் அரசியல், பொருளாதார நெருக்கடியினால் உக்கிரமாக்கப்பட்ட சமூக நெருக்கடியின் தாக்கங்களினை சவால் செய்யும் எந்தவொரு பாரதூரமான மாற்று வேலைத்திட்டத்தையும் தொழிலாளர் வர்க்கத்தின் பழைய அமைப்புக்கள் வழங்காத ஒரு நிலைமையில் பரந்த மக்களின் கோபத்தையும், விரக்தியையும் சுரண்டிக் கொள்ளும் சுதந்திரம் பாசிஸ்டுகளுக்கும், இனவாதிகளுக்கும், பொதுவில் பிற்போக்குச் சக்திகளுக்கும் கிடைத்துள்ளது.

இந் நிலைமையில் இந்தியாவினுள்ளும் அவ்வாறே இந்தியத் துணைக்கண்டத்தின் ஏனைய பிராந்தியங்களினுள்ளும் மதவாதம், இனவாதம், சாதிபேதம், பிராந்தியவாதங்கள் தலையெடுப்பதைக் காண்கிறோம். ஸ்டாலினிசக் குண்டர்கள் இந்தப் பிற்போக்குச் சக்திகளின் வளர்ச்சிக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரவளிக்கின்றனர். இதற்குக் காரணம் அவர்கள் முதலாளி வர்க்கத்துடன் நெருங்கி உறவாடுவதால் தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கியம், கிளர்ச்சியையிட்டு முதலாளி வர்க்கம் போலவே பீதி கொண்டுள்ளனர்.

...இந்தியாவினுள் 4 இலட்சத்துக்கும் அதிகமான தொழிற்சாலைகள் 'நோயாளி' ஆகியுள்ளதால் அவை மூடப்பட்டுள்ளன. அடுத்த 5 ஆண்டுகளுள் அரசாங்கத் துறையைச் சேர்ந்த 5 இலட்சம் தொழிலாளர்களும், தனியார் துறையைச் சேர்ந்த மற்றுமோர் 5 இலட்சம் தொழிலாளர்களும் தொழில்களை இழப்பர். இந்தியாவில் 350 மில்லியன் மக்கள் முழு வறுமைக் கோட்டின் கீழ் சீவிப்பதாயும், 270 மில்லியன் வளர்ந்தோர் படிப்பறிவின்மையில் மூழ்கியுள்ளதாயும், 750 மில்லியன் மக்கள் சுகாதார வசதிகள் இல்லாது வாழ்வதாயும், ஐந்து வயதுக்குக் குறைவான 70 மில்லியன் குழந்தைகள் போஷாக்கின்மையில் வாழ்வதாயும் 44.5 மில்லியன் குழந்தைகள் சிறுவர் உழைப்பில் ஈடுபட்டுள்ளதாயும் மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்கள் முழு அளவில் இயங்கத் தொடங்குவதற்கு முன்னர் இந்திய சுரங்கத் தொழிலாளர்களின் நிலைமை பரிதாபத்துக்கிடமாக விளங்கியது. 1986 1993க்கும் இடையே 20,000க்கும் அதிகமான சுரங்கத் தொழிலாளர்கள் உயிர்களை இழந்துள்ளனர். இதைவிட இரண்டு மடங்கானோர் முடமாகியுள்ளனர். இந்திய முதலாளித்துவத் தேசிய அரசாங்கங்கள் அதன் 4 1/2 தசாப்த கால 'சுதந்திர ஆட்சி'யில் உருவாக்கிய நிலைமை இவைதான்.

ஏகாதிபத்தியத்தினையும் புதுடில்லியிலும் உலகின் ஏனைய பாகங்களிலும் உள்ள ஏகாதிபத்தியச் சார்பு அரசாங்கங்களையும் தூக்கி வீச, தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கு சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சி — நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு முன்வைக்கும் அனைத்துலகவாத முன்நோக்கு அவசியம்......... உண்மையில் இலங்கைப் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படை அல்லது அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படை இந்த அரசியல், கோட்பாட்டு, வேலைத்திட்ட பிரச்சினைகளுடன் போரிட்டு உலக சோசலிசப் புரட்சியின் கட்சியைக் கட்டி எழுப்பத் தீர்மானம் செய்யாது போகின் எந்தவொரு ஒரு அடியையும் முன்வைக்க முடியாது.

★ தோழர். கீர்த்தியின் நினைவு நீடூழி வாழ்க!

★ இலங்கை —இந்திய தொழிலாளர் வர்க்கத்தின் தொழிலாள வர்க்க அனைத்துலகவாத ஐக்கியம் நீடூழி வாழ்க!

★ நான்காம் அகிலத்தை கட்டியெழுப்பு!

★ உலக சோசலிசப் புரட்சியை நோக்கி முன்னேறு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிராங்பேட் ஐரோப்பிய தொழிலாளர் மகாநாடு

# தொழிலாளர் வர்க்க அனைத்துலக ஐக்கியத்துக்கான முக்கிய நடவடிக்கை

ஜூன் முதல்வார இறுதியில் நான்காம் அகிலம் அதனது ஐரோப்பியத் தொழிலாளர் மகாநாட்டினை ஜேர்மன் நகரான பிராங்பேட்டில் நடாத்தியது. இம்மகாநாடு, முழு மனித இனத்தினையும் அச்சுறுத்திக் கொண்டுள்ள ஆபத்துக்களுக்கு — வேலையின்மை, பாசிசம், யுத்தம் — எதிராக தொழிலாளர் வர்க்கத்தினை அணிதிரட்டக் கூட்டப்பட்டது.

இந்த ஆபத்துக்கள் இத்தாலிய அரசாங்கத்தினுள் பாசிஸ்டுகள் நுழைந்து கொண்டமை, ஜேர்மனி வீதிகளில் வெளிநாட்டுத் தொழிலாளர்கள் பாசிசக் கும்பல்களின் பயங்கரத்துக்குள்ளானமை, பொஸ்னியாவில் இரத்தம் தோய்ந்த உள்நாட்டு யுத்தம் போன்ற சமீபகால சம்பவங்களால் சுட்டிக்காட்டப்பட்டது.


இந்த ஆபத்துக்களின் மூலவேராக முதலாளித்துவ அமைப்பின் அளப்பரிய நெருக்கடி இருந்து கொண்டுள்ளது. இந்த அமைப்புக்கு எதிராக தொழிலாளர் வர்க்கத்தினை அணிதிரட்டுவதன் மூலம் மட்டுமே எதிர்கொள்ளமுடியும். இவை இம்மகாநாட்டின் நடுமையமான செய்தியாக விளங்கின.

இந்த பிராங்பேட் மாநாடு, ஸ்பெயினிலும் பிரான்சிலும், இத்தாலியிலும், அயர்லாந்திலும், பிரித்தானியாவிலும் பல மாதகாலம் நடாத்திய உக்கிரமான அரசியல் நடவடிக்கைகளின் உச்சக்கட்டமாக விளங்கியது. ஜேர்மனியிலும், பிரித்தானியாவிலும் நான்காம் அகிலத்தின் பகுதிகளான சோசலிச வேர்க்கஸ் லீக்கும் (BSA) அனைத்துலகக் கம்யூனிஸ்ட் கட்சியும் (ICP) தலா மூன்று வேட்பாளர்களை ஜூன் 12ம் திகதிய ஐரோப்பிய பாராளுமன்றத் தேர்தல்களில் நிறுத்தின.

இந்த பிரச்சார இயக்கத்தின் வேலைத்திட்ட அடிப்படையாக விளங்கிய நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் ஐரோப்பிய விஞ்ஞாபனம் 10 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, ஆயிரக்கணக்கில் விற்பனை செய்யப்பட்டது. இந்த விஞ்ஞாபனத்தின் மையமாக தொழிலாளர் வர்க்கம் ஒரு சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அனைத்துலக ரீதியில் ஐக்கியப்படுத்தப்படவேண்டியதன் அவசியம் விளங்கியது.

இம்மகாநாடு, தொழிலாளர்களின் பரந்த தட்டினரிடையே இந்த வேலைத்திட்டத்துக்குக் கிடைத்த ஆழமான அக்கறையை பிரதிபலித்தது. பல நாடுகளின் நான்காம் அகிலத்தின் பகுதிகளின் அங்கத்தவர்களோடு பிரித்தானியா ஜேர்மனியைச் சேர்ந்த பல முக்கிய பக்டரிகளில் -எகோ ஸ்டால், புடரஸ் அன்ட் ஒபல்- இருந்தும் தொழிலாளர்கள் இதில் கலந்து கொண்டனர். அத்தோடு இலங்கை, துருக்கி, ஈரான், மொறாக்கோ முதலிய இடங்களில் இருந்தும் தொழிலாளர் கலந்து கொண்டிருந்தனர்.

பேராளர்கள் பீ எஸ் ஏ யின் தேசியச் செயலாளரான உல்ரிஜ் றிப்பேர்ட்டினால் வரவேற்கப்பட்டனர். மாநாட்டு மேடையில் ஐ சீ பி தேசிய செயலாளர் டேவ் ஹைலன்ட், மத்திய குழு உறுப்பினரான கிறிஸ் மார்ஸ்டன், அவுஸ்திரேலிய சோசலிச தொழிலாளர் கழகத்தின் ரெடி கவனாஹ் அமர்ந்திருந்தனர்.


பீட்டர் சுவார்ஸ்

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் செயலாளர் பீட்டர் சுவார்ஸ் தமது மாநாட்டு முடிவுரையில் இக்கூட்டத்தின் சிறப்பு முக்கியத்துவத்தினைத் தொகுத்துக் கூறுகையில் கூறியதாவது: ''இம் மகாநாடு, தொழிலாளர் இயக்கத்தின் அரசியல் நெருக்கடியினைத் தீர்க்கும் திசையில் எடுக்கப்பட்ட ஒரு முக்கிய நடவடிக்கையாகும். தேசியவாதம். இனவாதம், யுத்தத்தின் பெருக்கத்துக்கு ஒரு பதிலீடாக — தொழிலாளர் வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியம் உள்ளதை இது எடுத்துக் காட்டியுள்ளது.

''தொழிலாளர் வர்க்கத்தினால் மட்டுமே தேசியக் கால்கட்டுக்களைத் தாண்டிச் செல்ல முடியும். ஏனெனில் கார்ள் லீப் நேக்ட் குறிப்பிட்டது போல் தொழிலாளர் வர்க்கத்துக்கு தாயகம் கிடையாது. அத்தோடு அத்தகைய ஒரு முன்நோக்கினை நடைமுறையில் யதார்த்தமாக்கக் கூடிய ஒரே கட்சி நான்காம் அகிலம் மட்டுமே.''

## தொழிலாளர் இயக்க நெருக்கடி

பழைய சீர்திருத்தவாத, ஸ்டாலினிச கட்சிகளதும், தொழிற் சங்கங்களதும் வங்குரோத்து மகாநாட்டின் மையத் தொனியாக விளங்கியது. சகல பேச்சாளர்களும் தெளிவுபடுத்தியது போல இந்த அமைப்புக்கள் தொழிலாளர் வர்க்கத்தின் மிகவும் அடிப்படை நலன்களை பேணத் தன்னும் விருப்பமோ அல்லது சக்தியோ இல்லாதவையாகி விட்டன. ஜேர்மனியில் சமூக ஜனநாயகக் கட்சியினதும், பிரித்தானியாவில் தொழிற் கட்சியினதும், பிரான்ஸ், இத்தாலியில் கம்யூனிஸ்ட் கட்சிகளதும் அரசியல் பழைய முதலாளித்துவக் கட்சிகளில் இருந்து வேறுபட்டவை அல்ல. தொழிலாளர் வர்க்கத்தின் வாழ்க்கைத் தரத்தின் மீது தொடுக்கப்படும் தாக்குதல்களுக்கு எதிராக குறைந்தபட்ச எதிர்ப்பைத் தன்னும் காட்டுவதற்கு மாறாக இந்த அமைப்புக்கள் இத் தாக்குதல்களை நடைமுறைப்படுத்த முதலாளித்துவத்துடன் கைகோர்த்துச் செயற்படுகின்றது.

யுத்தத்தின் பின்னைய காலப்பகுதியில் வர்க்க சமரசத்தினை வளர்த்தெடுத்த இந்த அதிகாரத்துவங்கள் இன்று தொழிலாளர் வர்க்கத்தின் நலன்களில் இருந்து முழுமனே விடுபட்டு, முதலாளி வர்க்க அமைப்புக்களாகத் தொழிற்படுகின்றன. அவர்களது முழு அணுகுமுறையும், வாழ்க்கையும் முதலாளித்துவ அரசுடன் பிணைக்கப்பட்டுள்ளது. இதனைக் கட்டிக் காக்க அவை உத்தரவாதம் அளித்துள்ளன. இவர்கள் ஒரு நாட்டுத் தொழிலாளர்களை ஏனைய நாடுகளில் உள்ள அவர்களின் வர்க்க சகோதரர்களில் இருந்து பிரிக்கும் பொருட்டு தேசியவாதத்திற்கு தாளம் போடுகின்றனர். இந்த அதிகாரத்துவங்கள் பல தசாப்தகாலங்களாக தொழிலாளர் வர்க்கத்தின் மேல் கொண்டிருந்த ஆதிக்கம், தொழிலாளர்களின் சோசலிச நனவினைப் பாதித்துவிட்டது. தொழிலாளர் வர்க்கத்தின் பணி வெறுமனே உடனடியான அன்றன்றாடைய பிரச்சினைகளை தீர்ப்பது அல்ல. அதனது இறுதி இலக்கு வெறுமனே உயர் சம்பளம் அன்றி கூலிமுறையை ஒழித்துக் கட்டுவதும் மனித இனத்தினை விடுதலை செய்வதுமேயாகும். இந்த பின்னைய நிலைப்பாடு அதிகாரத்துவங்களால் முறைமுறையாக நசுக்கப்பட்டுள்ளது.

எனவேதான் ஐரோப்பாவில் பரந்தளவிலான வேலையின்மையின் பெருக்கமும் மோசமான சமூக நெருக்கடியும் முதலாளி வர்க்கத்துக்கு எதிரான ஒரு பரந்த இயக்கத்தினை அன்றி அதற்கு மாறாக வலதுசாரி, பாசிச போக்குக்களின் பெருக்கத்தை உண்டுபண்ணியுள்ளது.

## இத்தாலியின் படிப்பினைகள்

இத்தாலியத் தேர்தல்களில் வலதுசாரிகள் வெற்றிகண்டு, பாசிஸ்டுகள் அரசாங்கத்தினுள் நுழைந்து கொண்டமை அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்துக்கு ஒரு கடும் எச்சரிக்கையாகும். கலந்துரையாடலில் இடம் பெற்ற பல பங்களிப்புக்கள் இதனைத் தெளிவுபடுத்தின.

தமது இறுதி கருத்துரையில் சுவார்ஸ் நிலைமையை இருப்பெடுக்கையில் கூறியதாவது; ''இத்தாலிய அனுபவங்களில் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய எச்சரிக்கை வருமாறு: தொழிலாளர் வர்க்கம் இன்றைய சமூக நெருக்கடியைத் தீர்த்து வைக்காது போனால் முதலாளி வர்க்கம் தனது சொந்தத் தீர்வினைத் திணிக்கும். இந்த தீர்வு பாசிசத்தையும் யுத்தத்தையும் குறிக்கிறது. பதிலீடு: சோசலிசம் அல்லது காட்டுமிராண்டித்தனம்.

''நாம் இத்தாலியில் உள்ள அரசாங்கம், 1923ல் இத்தாலியில் அல்லது 1933ல் ஜேர்மனியில் இருந்ததைப் போன்ற ஒரு பாசிச அரசாங்கம் எனக் கூறவில்லை. மேலும் பேர்லுஸ்கோனியையும் அவனின் பாசிசக் கூட்டாளிகளையும் ஆட்சிக்குக் கொணர்ந்த இயக்கம் ஒரு ஸ்தாபிதம் செய்யப்பட்ட பரந்த பாசிச இயக்கம் அல்ல. எவ்வாறெனினும் இத்தாலிய முதலாளி வர்க்கம் அதற்கு உரித்தான முறையில் சமூக நெருக்கடியைத் தீர்த்து வைக்கும் திசையில் முதலடியை வெற்றிகரமாக எடுத்துள்ளது.

பினியை ஏற்றுக்கொண்டதன் மூலமும் அரசாங்கத்தின் உள்ளும், முக்கிய பதவிகளினுள்ளும் தேசிய முன்னணியை கொணர்ந்ததன் மூலமும் முதலாளி வர்க்கம் பாசிச சக்திகளின் எதிர்கால வளர்ச்சிக்குப் பெரிதும் சாதகமான நிலைமைகளைச் சிருஷ்டித்துக் கொடுத்துள்ளது. அவர்கள் பாசிஸ்டுகளை முழு அரசியல் மாற்றத்தினையும் வலது பக்கமாகத் திருப்ப வைக்கப் பயன்படுத்துகின்றாகள். தொழிலாளர் வர்க்கம் தலையிடாது போகின் இந்தத் திசையில் மேலும் முன்னேற்றம் ஏற்படும்.

''இந்த எச்சரிக்கை இத்தாலிக்கு மட்டும் கட்டுப்பட்டது அல்ல. முதலாளித்துவ சமுதாயத்தின் நாற்றமெடுப்பு வலதுசாரிப் போக்குக்களை எங்கும் பெருகச் செய்கின்றது. சற்று முன்னர் பேர்லுஸ்கோனி ஒரு வெறும் ஆரம்பமாகக் கணிக்கப்பட்ட போதிலும் அதே சமயம் அனைத்துலக முதலாளி வர்க்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டு அதன் அரவணைப்பினுள் கொணரப்பட்டார்.''

இந்த அடிப்படையில் சுவார்ஸ் மத்தியதர வர்க்கத் தீவிரவாதிகளின் பாத்திரத்தினைப் பற்றிக் குறிப்பிடுகையில் கூறியதாவது:

''ஐரோப்பா பூராவும் அவர்களின் செய்தி ஒன்றே: ''கிலேசம் அடைவதற்கு எதுவும் இல்லை... இது ஒரு வெறும் தேர்தல் தோல்வியே. இது வர்க்கப் போராட்டத்தில் இடது பக்கம் இழுத்துச் செல்லும்.'' ''பாசிஸ்டுகளைப் பற்றி தொழிலாளர்களுக்கு அனுபவம் உள்ளதால் இவை எல்லாம் நன்மைக்கே. அவர்கள் இவற்றில் இருந்து எதையும் கற்றுக் கொள்வார்கள்.'' 'அத்தோடு 'எப்படியும் பெரும் போராட்டங்கள் எம் முன்னால், வந்து கொண்டுள்ளன.''


சுவார்ஸ் இத்தகைய நிலைப்பாடுகள் பற்றி தெளிவுபடுத்துகையில் கூறியதாவது: மேலெழுந்தவாரியாக நோக்குமிடத்து இவை நன்மை பயப்பன போல் தோன்றும். ஆனால் யதார்த்தத்தில் இது திடநம்பிக்கைவாதத்தின் ஒரு துணிச்சலான வடிவமாகும். இது ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஏர்ணஸ்ட் தேல்மனின் பிரசித்திபெற்ற சூத்திரத்தினை நினைவுக்குக் கொணர்கிறது. அவர் 1933ன் தறுவாயில் ''ஹிட்லரின் பிறகு அடுத்தது நாம்!'' எனப் பிரகடனம் செய்தார்.

( 11ம் பக்கம் பார்க்க )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத் தேர்தல் – 1994
# பதுளை மாவட்டம்

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக சோசலிஸ்ட் வேட்பாளர்களுக்கு வாக்களியுங்கள்!




### ஆர்.எம். குணதிலக

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக மத்திய குழு உறுப்பினர். 1980 யூலை வேலைநிறுத்தத்தில் வேலை நீக்கம் செய்யப்பட்ட இ.போ.ச. தொழிலாளி. 1965ல் இ.போ.ச. பஸ் நடத்துனராக மகரகம டிப்போவில் சேவைக்கு சேர்ந்த இவர் அகில இலங்கை ஐக்கிய மோட்டார் தொழிற்சங்க (அ.இ.ஐ.மோ.சங்க) த்தில் இணைந்து, தொழிலாளர் போராட்டங்களில் செயற்பட்டவர். 1968ல் பு.க.க.ல் சேர்ந்த இவர் துரோக ல.ச.ச.கட்சி தொழிற் சங்க தலைமைக்கெதிரான போராட்டத்தில் ஈடுபட்டார்.

சிறீலங்கா சுதந்திர கட்சி, ல.ச.ச.க. கம்யூனிஸ்ட் கட்சி முதலாளித்துவ கூட்டரசாங் கத்திற்கு எதிராக போராடியதால் கூட்டரசாங்கம் ஆட்சியேற்ற ஒரு மாத காலத்துள் இவர் தாய்த் தொழிற்சங்க தலைமையினால் தொழிற்சங்கத் திலிருந்து விலக்கப்பட்டார். 1971ல் அரசியல் வேட்டைக்கு இலக்காக ஆறு மாத காலமாக வேலையிழந்திருந்தார். பலாங்கொடை டிப்போவிற்கு இடமாற்றப்பட்ட குணதிலக அங்குள்ள தொழிலாளரால் அ.இ.ஐ. மோட்டர் சங்க கிளைச் செயலாளர் பதவிக்குப் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார்.

பின்னர் இ.போ.ச. கணக்காய்வு லிகிதராக நுகேகொட இ.போ.ச. கணக்கு ஆய்வு அலுவலகத்துக்கு நியமிக்கப்பட்ட குணதிலக அங்குள்ள கிளையின் செயற்குழுவிற்கு தொழிலாளரினால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

முதலாளித்துவ கூட்டரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தின் போது மீண்டும் வேலைநீக்கப்பட்ட குணதிலக 1977 பெப்ரவரியில் நாவலப்பிடி டிப்போவுக்கு மீள நியமனம் பெற்றார். 1977ல் யூ.என்.பி. ஆட்சிக்கு வந்தபின் பல்வேறு இடங்களுக்கும் இடம்மாற்றப்பட்ட குணதிலக, 1978ல் பண்டாரவளை டிப்போவிற்கு வந்தார். 1980ல் யூலை வேலைநிறுத்தத்தில் வேலையிழந்த இவர் இன்றுவரை மீளமர்த்தப் படவில்லை.




### வஜிர பாணினி விஜேசிரிவர்தன

பண்டாரவளை பகுதியின் பு.க.க. முன்னணி உறுப்பினர். பு.க.க. நிறுவிய சுயாதீன தொழிலாளர் விசாரணைக் குழு உறுப்பினர். தொழில் ரீதியில் ஆசிரியர். தற்சமயம் தியதலாவ கஹகொல்ல வித்திலாயத்தில் சேவையாற்றுகின்றார். இலங்கை ஆசிரியர் சங்கத்தினுள் (இ.ஆ.ச.) செயலூக்கமுள்ள பு.க.க. குழுவின் முக்கிய போராளியாவார். இலங்கை ஆசிரியர் சங்க பிரதிச் செயலாளராக விளங்கிய இவரை இ. ஆசிரியர் சங்க துரோக தொழிற்சங்க தலைமையானது சனநாயக விரோத அதிகாரத்துவ பாணியில், பிரதிச் செயலாளர் பதவியிலிருந்தும். இ.ஆ. சங்க மத்திய நிர்வாக குழுவிலிருந்தும் விலக்கியது.

1977ல் பு.க.கழக மாத்தறை கிளையில் சேர்ந்து பு.க. கழகத்தில் இணைந்த பாணினி, விசேடமாக மாத்தறை, பண்டாரவளை பகுதியில் மாணவர் பெற்றோர் உட்பட்ட தொழிலாளர்-ஒடுக்கப்பட்ட மக்களிடையே இலவசக் கல்வி உரிமை பேணுமுகமாக ஆசிரியர் மாணவர், பெற்றோரை அணி திரட்ட முன்நின்றுழைத்த பேராளியாக புகழ் பெற்றவர்.


யூ.என்.பி. அரசாங்கத்தின் அரசியல் வேட்டைக்கு இலக்காகி மாத்தறை ராகுல வித்தியாலயத்திலிருந்தும் பின்னர் தீவு எங்கணுமுள்ள பல்வேறு பாடசாலைகளுக்கும் இடமாற்றப்பட்ட இவர், இரு வருடங்களாக பண்டாரவளை பகுதிக்குள் பல பாடசாலைகளுக்கு அடிக்கடி இடம் மாற்றப்பட்டார்.



### கந்தன் செல்வராஜா

நான்கு வருடங்களாக பு.க.க. உறுப்பினராக விளங்கும் இவர் பதுளை எலதலுவ தோட்டத் தொழிலாளி. பு.க.க.வுடன் இணைந்த பெருந்தோட்டக், கைத்தொழில் தொழிலாளர் சங்கத் தலைவர். ஸ்டாலினிச கம்யூனிச கட்சியுடன் இணைந்த ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்க உறுப்பினராக விளங்கிய போது பு.க.க. வில் சேர்ந்த இவர் பு.க.க. புரட்சிகர வேலைத்திட்டங்களின் கீழ் ஐக்கிய தோட்டத் தொழிற் சங்க (யூ.பீ.டபிளியூ.) ஸ்டாலினிச தலைமைகளின் துரோக வேலைத் திட்டத்திற்கு எதிராக போராடினார். பின்னர் இவர் பு.க.க.வுடன் இணைந்து சங்கத்தை நிறுவ முன் நின்றுழைத்தவர்.

பு.க.க. 1992 நவம்பர் 8ம் திகதி கூட்டிய ஆசிரியர்–மாணவர்–பெற்றோர் மகாநாட்டிலும் 1994 யூன் 19ம் திகதி கூட்டிய தொழிலாளர் பேராளர் மாநாட்டிலும் தொழிலாளரை செல்வராஜா பிரதிநிதித்துவம் செய்தார். அப்புத்தளை நீட்வூட் தோட்ட தொழிலாளர் போராட்டத்தில் அத் தொழிலாளரது நடவடிக்கை குழு ஒன்றை நிறுவி, புரட்சிகர வேலைத்திட்ட அடிப்படையில் நீட்வுட் போராட்டத்தை அணிதிரட்டப் பு.க.க. மேற்கொண்ட தலையீட்டில் செல்வராஜா ஊக்கமுடன் பங்குபற்றினார்.-



### சங்கதாச மாரசிங்க

ஆசிரியராகத் தொழில் புரிபவர். இலங்கை ஆசிரியர் சங்க பதுளை பிரதேச சபை தலைவர். 1973ல் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேர்ந்தவர். 1976ல் கூட்டரசாங்கத்தால் நடத்தப்பட்ட வீரசூரிய என்ற மாணவன் கொலைக்கு எதிராக பு.க.க. நடத்திய போராட்டத்தில் ஈடுபாடுடன் உழைத்த சங்கதாச அங்கு வேறுபல பு.க.க. உறுப்பினருடன் கைது செய்யப்பட்டு பதுளை சிறையில் தள்ளப்பட்டவர். 1980 யூலையில் வேலை நிறுத்தம் செய்தவர். தற்போது லுணுவத்த வித்தியாலத்தில் கடமையாற்றுகிறார்.

பிரதேசமெங்கும் தோட்டத் தொழிலாளர், வறிய விவசாயிகள் இடையில் தொழிலாளர் அனைத்துலக வேலைத்திட்டத்திற்காக போராடிய சங்கதாச இலவசக் கல்வியை ஒழிக்கும் யூ.என்.பி., உலக வங்கி தயாரிப்பான பாடசாலை அபிவிருத்தி சபை நிறுவுவதற்கெதிராகப் பலத்த பிரசாரத்திலீடுபட்டதால் அரசியல் வேட்டைக்கு இலக்காகி மகியங்கனைக்கு மாற்றப்பட்டார். எனினும் இந்த அரசியல் வேட்டைக்கு எதிராக பு.க.க. நடத்திய பிரச்சாரத்தின் எதிரில் இந்த இடமாற்றம் இரத்து செய்யப்பட்டு, சங்கதாச மீண்டும் லுணுவத்த மத்திய மகா வித்தியாலயத்தில் சேர்க்கப்பட்டார்.



### எச்.எம். ஹேரத் பண்டார

பண்டாரவளை அம்பேகொட கலகெட்டியாவையில் வசிக்கும் விவசாய இளைஞர். மக்கள் விடுதலை முன்னணி பாசிஸ்டுகளால் கொலை செய்யப்பட்ட பு.க.கழக உறுப்பினரான வெலிமட ஹகுன்னாவே ஆர்.ஏ. பிட்டவல தோழரது 5 வருட நினைவு தின பூர்த்தி கூட்டத்தை ஒழுங்குசெய்து அஞ்கலிகல் நாட்டி, பு.க. கழகம் நடாத்திய பிரசாரத்தின் போது–1993 நவம்பரில் பு.க.க. சேர்ந்த ஹேரத், பண்டாரவளை வெலிமட பகுதியின் வறிய விவசாயிகளிடையேயும் அப்புத்தளை பகுதி தோட்ட தொழிலாளரிடையேயம் பு.க. கழக வேலைத் திட்டத்துக்காக போராடினார்.




### ஆர்.எம். தயாநந்த


பண்டாரவளை கினிகமவில் வசிக்கும் 39 வயதான ஆசிரியர். 1991 ஆகஸ்டில் பு.க.க.ல் சேர்ந்தவர். இ.ஆ. சங்கத்தின் செயலூக்கமுள்ள பு.க.க. குழுவின் உறுப்பினரான இவர், இ.ஆ. சங்க பதுளை கிளையின் பிரதி தலைவர். தற்போது பண்டாரவளை கந்தைஅராவ வித்தியாலயத்தில் சேவை புரிபவர். ப/விசாகா வித்தியாலயத்தில் சேவையாற்றும் போது அரசியல் வேட்டைக்கு இலக்காகி ப/தர்மபால வித்தியாலயத்திற்கும் அங்கிருந்து மீண்டும் ப/கண்தெஅராவ வித்தியாலயத்திற்கும் தயாநந்த இடம்மாற்றப்பட்டார். இந்த அரசியல் வேட்டையின் ஓரம்சமாக ப/தர்மபால வித்தியாலயத்தின் அதிபர், தயானந்தவிற்கு எதிராக பொலீசாரையும் குண்டரையும் அணிதிரட்டினார்.



### ஹேமந்த சூரியகுமார வலிகேன

பண்டாரவளை அன்டன் தோட்டத்தில் வசிக்கும் 28 வயதான ஹேமந்த ஓர் ஆசிரியர். இலங்கை ஆசிரியர் சங்கத்துள் செயலூக்கமுள்ள பு.க.க. குழுவின் அங்கத்தவர். 1993 பெப்ரவரியில் கட்சியில் சேர்ந்த இவர், நீட்வூட் அப்புத்தளை தோட்ட தொழிலாளர் போராட்டங்களிலும் பு.க.க. அரசியல் வேலைத்திட்டங்களிலும் செயலூக்கமுடன் தலையிட்டவர்.

| சுயேட்சை குழு இலக்கம் 1 |  | X |
| --- | --- | --- |



### டீ.எம். கருணாரத்ன

அட்டம்பிட்டி கொட்ட கொடல்லவில் வசிக்கும் கருணாரத்ன 1972ல் பு.க.க.வில் சேர்ந்த நீண்டகால உறுப்பினர். பெருந்தோட்டக், கைத்தொழில் தொழிலாளர் சங்க நிர்வாக குழு உறுப்பினர். முதலாளித்துவ வர்க்கத்திற்கும் யூ.என்.பி. அரசாங்கத்திற்கும் எதிராக பிரதேச (விவசாய) மக்களிடையே தொழிலாள வர்க்க அனைத்துலகவாத வேலைத்திட்டத்துகாகப் போராடியவர். கருணாரத்ன 1976, 1980 யூலை பொது வேலைநிறுத்தங்களில் பு.க.க. அரசியல் வேலைத்திட்டங்களினடிப்படையில் நடத்தப்பட்ட பிரச்சாரங்களில் செயலூக்கமுடன் முன்நின்றவர். இவர் அட்டன் தோட்டத்தில் பு.க.க. கட்டியெழுப்பிய தொழிலாளர் நடவடிக்கை குழுவின் தலைவர்.



### எம். அரவிந்தன்


பு.க.க. மத்திய குழு உறுப்பினர். தொழிலாளர் பாதை கம்கறு மாவத்தை ஆசிரியர் குழு உறுப்பினர். 1976ல் பு.க.க.ல் இணைந்த அரவிந்தன் அன்றைய உள்ளூராட்சி சேவையில் தொழில் நுட்ப அலுவலராக விளங்கியவர். இவர் 1988ல் அத் தொழிலில் இருந்து இராஜினாமா செய்துவிட்டு கட்சியின் முழுநேர ஊழியரானார். யாழ்ப்பாண மாவட்ட தமிழ் தொழிலாளர், ஒடுக்கப்பட்ட மக்களிடையேயும் நுவரேலியா, பதுளை மாவட்ட தோட்ட தொழிலாளரிடையிலும் தொழிலாளர் வர்க்க அனைத்துலகவாத வேலைத்திட்டங்களுக்காக உறுதியுடன் போராடிய சிறப்பு வரலாறு அரவிந்தனுக்கு உண்டு.

அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தினால் கூட்டப்பட்ட–1991 நவம்பர் 16ம்–17ம் திகதி ஜேர்மன் பேர்ளினில் கூடியது–ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிரான உலகத் தொழிலாளர் மகாநாட்டில் கலந்து கொண்ட பு.க.க. பிரதிநிதிகளில் அரவிந்தனும் ஒருவர். இவர் 1984 கொழும்பு மாரகர சபை தேர்தலில் பு.க. கழக வேட்பாளராக நின்றவர்.



### ஆர்.எம். பிரேமஜயந்த

பசறை மடோல்சிம கல் உல்லை தோட்டத்தில் வசிக்கும் பிரேமஜயந்த 28 வயதுடைய தோட்டத்தொழிலாளி. கல் உல்ல தோட்ட தொழிலாளரிடையே பு.க.க. நடத்திய அரசியல் தலையீட்டினால் 1994 சனவரியில் கட்சியில் சேர்ந்த இவர் அப்பகுதி தோட்டத் தொழிலாளர் மற்றும் ஒடுக்கப்பட்டவரிடையே தொழிலாளர் பாதை, கம்கறு மாவத்தை பத்திரிகை விற்பனை மூலம் அரசியல் பிரசாரத்திலீடுபடுபவர்.



### ஹர்ஷ விஜேபால

27 வயதான ஆசிரிய தொழில்புரியும் ஹர்ஷ இலங்கை ஆசிரியர் சங்கத்துள் செயலூக்கமுள்ள பு.க.க. உறுப்பினர். மீரிகம ஹாபிடிகம கல்வித் திணைக்கள விஞ்ஞான துறை ஆசிரிய, மாணவர்களிடையே பு.க.க. நடத்திய அரசியல் தலையீட்டினால் 1991ல் பு.க.க.ல் இணைந்த ஹர்ஷ, 1991 யூனில் நடந்த பு.க.க. இளைஞர் இயக்கமான இளம் சோசலிஸ்டுகளின் 10ம் தேசிய மகாநாட்டில் இளம் சோசலிஸ்டுகளின் தேசிய குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர். மாணவ ஆசிரியராக விளங்குகையில் வியாங்கொடை, கம்பகா, பகுதியில் தொழிலாளர் ஒடுக்கப்பட்ட மக்களிடையேயும் கட்டுநாயக சுதந்திர வர்த்தக வலய தொழிலாளரிடையேயும் அரசியல் தலையீட்டில் ஈடுபட்ட ஹர்ஷ 1993ல் பசறை, மடோல்சிம வித்திலாய ஆசிரியராக நியமிக்க பட்டபின் பு.க.க. பதுளைக் கிளையில் இணைந்து, பசறை பகுதியில் தோட்ட தொழிலாளரிடையே பு.க.க,. கிளையை கட்டியெழுப்ப போராடினார்.

**பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதத்துக்கு போராடு!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுஸ்லாவுக்கான பாதை

# சுலோற்றரின் தொழிலாளர் புரட்சிக் கட்சி பால்கனில் ஏகாதிபத்தியத்துக்கு உதவுவது எப்படி?

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை

பாகம் – 2

## யூகோசலாவியாவும் ஏகாதிபத்தியத் தீர்வும்

சேர்பிய சோசலிஸ்டுகளின் யுத்தம் பற்றிய மதிப்பீடு, 1918ல் யுத்த நிறுத்தம் பிரகடனம் செய்யப்பட்டு அதிக காலம் செல்வதற்கு முன்னரே ஊர்ஜிதம் செய்யப்பட்டது. ஜனநாயக வாய் வீச்சுக்களுக்கு இடையேயும் நேசநாடுகளின் வெற்றியாளர்கள் தேசியங்களின் சுயநிர்ணயத்தில் அக்கறை கொள்ளாது கொள்ளை அடித்தவற்றைப் பங்குபோடுவதில் –முக்கியமாக முன்னைய ஓட்டோமன் பிராந்தியங்களையும் ஜேர்மனியின் காலனிகளையும் பங்கு போடுவதிலேயே அக்கறை காட்டினர்.

ஏகாதிபத்தியம் பால்கனின் எல்லைக் கோடுகளை மீள வரைந்தது. தன்னிச்சையான தேசிய எல்லைகள் மூலமும் படுமோசமான அடக்குமுறைகள் மூலமும் கூறுபோடப்பட்ட அதன் மக்களைத் திரும்பவும் புதிய ஆட்சியாளர்களின் கைக்குள் தள்ளியது. உதாரணமாக, ருமேனியாவினுள் 50 இலட்சம் ருமேனியர் அல்லாத மக்கள் சேர்க்கப்பட்டனர். பெருமளவிலான ஹங்கேரியன் சிறுபான்மையினர் ட்ரான்சில்வேனியாவில் குவிந்து போய் இருந்த அதே வேளையில் தென் டொப்றுஜாவில் பல்கேரியர்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தனர். பெசரபியாவும், புக்காவினோவும் பெருமளவிலான உக்ரேனியன் சனத்தொகையைக் கொண்டிருந்தது.

கிரீசும் துருக்கியும் ஒரு பலாத்காரமான சனத்தொகைப் பரிமாற்றத்துக்கு ஏற்பாடு செய்ததன் மூலம் தேசியப் பிரச்சினைக்கு ஒரு காட்டுமிராண்டித் 'தீர்வை'க் கடைப்பிடித்தது. இதில் பரந்த அளவிலான மக்கள் இனக்குழு ரீதியில் ஓரினத் தன்மையான தேசங்களை ஏற்படுத்தும் முகமாகப் புதிதாக வரையப்பட்ட எல்லைக் கோடுகளுக்கு ஊடாக ஓட்டிக் கலைக்கப்பட்டனர்.

புதிய யூகோசலாவிய அரசானது யுத்தத்தைத் தொடர்ந்து வந்த வல்லரசுக் குதிரை வர்த்தகத்தின் வம்புக் குழந்தையாக விளங்கியது. ஏகாதிபத்தியத் தீர்வின் மூலம் சிருஷ்டிக்கப்பட்ட ஏனைய சகல அரசுகளையும் எல்லைகளையும் போலவே இது பால்கன் மக்களின் எந்தவொரு ஜனநாயக, தேசிய அபிலாசைகளையும் அடையத் தவறிவிட்டது.

இதன் ஸ்தாபிதம், பெருமளவுக்கு குரோஷியன் சுலோவீனியன் ஆளும் வர்க்கங்களின் ஆரம்பிப்பின் மீதே மேற்கொள்ளப்பட்டது. ஹப்ஸ்பேக் பேரரசின் வீழ்ச்சியுடன் அவர்கள் ஒன்றில் தனியொரு தென் சிலாப் அரசில் சேருவதா அல்லது தமது பிராந்தியங்கள் இத்தாலி, சேர்பியா– சிலவேளை ஆஸ்திரியா ஹங்கேரி இடையே பங்கு போடப்படும் சாத்தியத்தினை தரிசிப்பதா என்ற தெரிவுப் பிரச்சினைக்கு முகம் கொடுத்தனர்.

மேலும் பால்கன் முழுவதிலும் இருந்து வந்த ஆளும் பிரமுகர்கள் 1917 அக்டோபரின் வெற்றிகரமான ருஷ்யப் புரட்சி இந்தப் பிராந்தியத் தொழிலாளர் வர்க்கத்திடையேயும் ஒடுக்கப்படும் மக்களிடையேயும் புரட்சிகர எழுச்சிகளால் பதிலிறுக் கப்படுமோ என அஞ்சினர். இக்காரணங்களினால் குரோஷிய, சுலோவீனிய ஆட்சியாளர்கள் பாதுகாப்புக்காகப் பலமானதும் மத்தியமயமாக்கப்பட்டதுமான ஒரு சேர்பிய அரசுக்கு ஆதரவாகத் திரும்பினர்.

1918 டிசம்பர் 1ல் சேர்பியர்களதும், குரோஷியர்களதும், சுலோவீனியர் களதும் இராஜதானி ஸ்தாபிக்கப் பட்டது. புதிய நாடு 1929ல் யூகோசலாவியா என உத்தியோக பூர்வமாகப் பெயர் மாற்றம் செய்யப்பட இருந்தது. புதிய அரசானது சேர்பிய மன்னனதும், அரச அதிகாரத்துவத்தினதும், இராணுவத்தினதும் அதிகாரத் தினைப் புதிய பிராந்தியங்கள் முழுவதிலும் விஸ்தரிக்கும் ஒன்றாகத் தோன்றியது. இது முன்னைய ஹப்ஸ்பேர்க் பேரரசில் முன்னர் இருந்துவந்த நிறுவனங்களையும் ஒழித்துக்கட்டியதோடு, குரோஷிய இராணுவப் பிரிவுகளையும் தடைசெய்தது. சேர்பியர்கள் உண்மையில் அரசாங்கத்தின் உயர் பதவிகள் அனைத்திலும் அமர்த்தப் பட்டனர்.

அரசியல் எதிர்ப்புக்கள் – தேசிய சுயாட்சி கோரும் தனிநபர் அல்லது இயக்கங்கள் உட்பட – மிலேச்சமான முறையில் அடக்கி ஒடுக்கப்பட்டன. சேர்பியன் அரசுடனான தமது உடன்படிக்கை ஒரு பவுஸ்டியன் (Faustian) பேரம்பேசலாகும் என குரோஷியன் ஆளும் வர்க்கங்கள் கண்டதைத் தொடர்ந்து புதிய தேசியவாத அமைப்புக்கள் வளர்ச்சி கண்டன. இவற்றுள் ஸ்ரீபன் ரடீக்கின் குரோஷியன் குடியரசு விவசாயிகள் கட்சி (C.R.P.P.) பிரபல்யமானதாக விளங்கியது.

யுத்தத்துக்கும் சேர்பியர், குரோஷியர், சுலோவீனியர்களின் இராஜதானி ஸ்தாபிதம் செய்யப்பட்டதற்குப் பின்னரும் புத்துயிரூட்டப்பட்ட சேர்பிய சமூக ஜனநாயகக் கட்சி (SSDP) 'தொழிலாளர்கள், சமூகஜனநாயக வாதிகளுக்கு' என்ற தலைப்பில் அதன் முதல் பிரகடனத்தினை வெளியிட்டது. அது யூகோசலாவிய ஐக்கியத்துக்கு முன்னணியில் நின்றது. "சேர்பியர்கள், குரோஷியர்கள், சுலோவீனியர்கள் ஒரே மக்கள்" எனவும், அவர்கள் ஒரு "தேசிய அரசினுள் இணைவது ஒரு முக்கியமான அரசியல், பொருளாதார, கலாச்சார அவசியம்" என்ற நிலைப்பாட்டையும் வகித்தது.

அது சகல பிரிவினை அமைப்புக் களையும் ஒழிக்கும்படி வேண்டியது. தேசிய இனப் பிரச்சினை தனிச் சொத்தினை ஒழித்து, சோசலிச உற்பத்தியை ஒழுங்கு செய்வதன் ஊடாக மட்டுமே தீர்த்து வைக்கப்பட முடியும் எனக் கட்சி எச்சரிக்கை செய்தது. அது குடாநாட்டு மக்களின் கோரிக்கைகளைத் திருப்தி செய்யவும், ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் அடிமைத் தளையைத் தூக்கி வீசவும் செய்யும் ஏக சாதனமாக பால்கன் சமஷ்டி குடியரசு சுலோகத்தினை மீளவும் ஊர்ஜிதம் செய்தது.

இந்த முன்நோக்கின் அடிப்படையில் சேர்பியன் சமூக ஜனநாயகக் கட்சி (SSDP) அதனது இறுதி காங்கிரசை 1919 ஏப்பிரலில் நடாத்தியதோடு அதைக் கலைத்துவிடவும் புதிய இராஜ தானியின் நாளைய சோசலிச அமைப்புக்களுடன் யூகோசலாவிய கம்யூனிஸ்ட் கட்சியினுள் (CPY) ஐக்கியப்படவும், கம்யூனிஸ்ட் அகிலத்துடன் (Communist International) இணைந்து கொள்ளவும் வாக்களித்தது.

## யூகோசலாவிய கம்யூனிஸ்டுகள்

"அகில யூகோசலாவிய" அரசியல் அமைப்பாக உருவெடுத்த ஒரே போக்காக கம்யூனிஸ்டுகள் மட்டுமே விளங்கினர். அதன் தோற்றத்தின் ஆரம்ப வருடங்களில் ஒரு புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் பரந்த ஆதரவினை வெற்றி கொண்டது. இது புதிய யூகோசலாவிய அரசினைக் கண்டனம் செய்ததோடு, ஆளும் முதலாளி வர்க்கத்தினை நேசநாட்டு ஏகாதிபத்தியத்தின் ஒரு கைக்கூலியாக அம்பலமாக்கியது.

ஏனைய சகல கட்சிகளும் – சேர்பியர்கள், குரோஷியர்கள், சுலோவினியர்கள், முஸ்லீம்கள் ஒரே மாதிரியாக – ஆதரித்த தேசிய சோவினிசத்தினை எதிர்த்து CPY மட்டுமே சகல இனக் குழுக்களுக்கும் தேசிய இனங்களுக்கும் வேண்டுகோள் விடுத்தது. இது ஒரு தொகை தேர்தல்களில் அதற்குக் கிடைத்த வாக்குக்கள் மூலம் ருசுப்படுத்தப்பட்டது.

கட்சி 1920ல் குரோஷியன் தலைநகரான சக்ரெப்பிலும் சேர்பியன் தலைநகரான பெல்கிரேட்டிலும் மாநகரசபைத் தேர்தல்களில் பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றியது. கண்டிப்பான இனக்குழுக் கோட்டின் ஊடாக ஒழுங்கு செய்யப்படாத அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலில் பங்குகொண்ட கட்சி யூகோசலாவியா பூராவும் தொழிலாளர்களின் ஆதரவை வெற்றி கொண்டது. 58 ஆசனங்களை வெற்றி கொண்டதன் மூலம் இது மூன்றாம் இடத்தைப் பெற்றது. ஆட்சியாளர்கள் CPY ஐ அரசியல் நிர்ணய சபையில் இருந்து தள்ளி வைத்ததைத் தொடர்ந்து கம்யூனிஸ்டுகள் பெல்கிரேட்டினால் திணிக்கப்பட்ட புதிய அரசியல் அமைப்பைத் தொடர்ந்து எதிர்த்தனர்.

CPY வென்றெடுத்த பரந்த ஆதரவைக் கண்டு கிலியடைந்த யூகோசலாவிய முதலாளி வர்க்கம் ஒரு "அரசினைப் பாதுகாப்பது தொடர்பான சட்டத்தை" இயற்றியது. அது கம்யூனிசப் பிரச்சாரத்தில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனை விதித்தது. பொலிசார் கம்யூனிஸ்டு களை அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர மண்டபங்களில் இருந்து விரட்டினர். கட்சியினால் ஒழுங்கு செய்யப்பட்ட வேலைநிறுத்தங்கள் சட்டவிரோதமாக்கப்பட்டு சிதறடிக் கப்பட்டன. ஆட்சியாளர்கள் கட்சித் தலைவர்களை விசாரணை செய்து சிறையில் தள்ளியதோடு, சிலருக்கு மரண தண்டனையும் விதித்தனர்.

அக்டோபர் புரட்சியின் உடனடிப் பின் விளைவாக ஸ்தாபிதம் செய்யப்பட்ட சகல புதிய கம்யூனிஸ்ட் கட்சிகளையும் போலவே CPY அவசியமான அரசியல் சித்தாந்த தயாரிப்புக்களுக்கு உள்ளாகாமலும் சமூக ஜனநாயகத்துடனான கணக்கு வழக்குகளை முழுமனே தீர்த்துக் கொள்ளாமலுமே புரட்சிகர வேலையினுள் தான் தள்ளப் பட்டுள்ளதைக் கண்டது. கம்யூனிஸ்ட் அகிலம் தனது இரண்டாவது காங்கிரசில் இளம் யூகோசலாவிய கம்யூனிஸ்ட் கட்சி எதிர் கொண்ட பிரச்சினைகளை கவனத்தில் எடுத்தது. அவற்றினை ஒரு அதிகாரபூர்வமான தலைமையை உருவாக்கும் பூரணத்துவமாகாத பணிக்கும் கட்சியினுள் பாராளுமன்ற நப்பாசைகளைப் போதுமான விதத்தில் எதிர் கொள்ளத் தவறியமைக்கும் காரணம் கற்பித்தது. இவ்விரு போக்குக்களும் கட்சியை முதலாளி வர்க்கம் கட்டவிழ்த்துவிட்ட கொடூரமான அடக்குமுறைகளுக்குப் பலவீனமடையச் செய்தது.

எவ்வாறெனினும் கம்யூனிஸ்ட் அகிலம்-லெனினாலும் ட்ரொட்ஸ்கி யினாலும் தலைமை தாங்கப்பட்ட வேளையில் – பொதுவில் கட்சியின் மூலோபாய நிலைப்பாட்டுடனும் அல்லது குறிப்பாகத் தேசியப் பிரச்சினை தொடர்பாகவும் எந்தவிதமான வேறுபாட்டினையும் கொண்டிருந்ததாகக் காட்டும் அறிக்கைகள் எதுவுமே இல்லை. கம்யூனிஸ்ட் அகிலத்தின் முதல் நான்கு காங்கிரசுகள் பூராவும் பால்கன் சோசலிச சமஷ்டிக்கான போராட்டம் அதன் முன்நோக்காக இருந்து வந்தது.

## ஸ்டாலினிசமும் தேசிய பிரிவினைவாதமும்

"ட்ரொட்ஸ்கிசத்துக்கு" [illegible]ராக வளர்ச்சி கண்ட போராட்டத்[illegible]தும் ஸ்டாலினதும் புகாரினதும் "தனிநாட்டில் சோசலிசம்" கோட்பாட்டு விவரணங்களின் செல்வாக்கின் கீழும் 1924ல் நடாத்தப்பட்ட கம்யூனிஸ்ட் அகிலத்தின் ஐந்தாவது உலக காங்கிரசிலேயே இப்போது தொழிலாளர் புரட்சிக் கட்சி பரிந்து பேசுவதற்கு சமானமான தேசிய பிரிவினைவாத அரசியல் முதற்தடவையாக அறிமுகம் செய்யப்பட்டது.

சோவியத் யூனியனில் ஸ்டாலினதும் அன்றைய சமயத்தில் சினோவியேவினதும் தலைமையில் செயற்பட்ட அதிகாரத்துவக் கன்னை அபிவிருத்தி செய்த "வலது–மத்தியவாத கீழ்நோக்கிய சறுக்[illegible]" என ட்ரொட்ஸ்கி குறிப்பி[illegible] கொள்கையின் ஒரு முக்கிய அரங்காக யூகோசலாவியா மாறியது.

இந்தக் கன்னை CPY மீது விவசாயிகளையும் தேசிய வாதத்தினையும் நோக்கிய ஒரு போக்கினை நெருக்கியதோடு இறுதியில் திணிக்கவும் செய்தது. இந்தப் போக்கு, பல்கேரியாவிலும் ஜேர்மனியிலும் 1923 புரட்சி தோல்வி கண்ட தறுவாயில் இடம்பெற்ற ஒரு சந்தர்ப்பவாத நகர்ச்சியின் ஒரு முக்கிய அங்கமாகும். உலகத் தொழிலாளர் வர்க்கத் தலைமையை வெற்றி கொள்வதிலும் சோசலிசப் புரட்சியை விஸ்தரிப்பதிலும் கம்யூனிஸ்ட் அகிலம் எதிர்கொண்ட கஷ்டங்களால் முனமுறிவுக்கு உள்ளான ஸ்டாலின் தலைமை யிலான கட்சியின் பிரிவினர் ஏனைய வர்க்க சக்திகளுடன் கூட்டுக்குத் திரும்பினர்.

எழுச்சி கண்டு வந்த அதிகாரத்துவம் உலகப் புரட்சியின் தாமதத்தினால் சோவியத் அரசின் மீது திணிக்கப்பட்ட ஒரு "பின்வாங்கல்" என லெனினால் வருணிக்கப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கையை (NEP) ஒரு "பரிசுத்தம்" ஆகப் பரிணாமம் செய்ய முயன்றது. இது புகாரினின் "நாட்டுப்புறத்துக்குத் திரும்பு" என்ற சுலோகத்தினைக் கடைப்பிடித்த தோடு செல்வந்த விவசாயிகள் தட்டினரின் மேல் சார்ந்து கொள்வதன் மூலம் தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரத்தை மேலும் மேலும் பலப்படுத்திக் கொள்ள முயன்றது. இக் கொள்கையைக் காக்கும் பொருட்டு அதிகாரத்துவம் நிரந்தரப் புரட்சிக்கு எதிராக ஒரு போராட்டத்தினைத் தொடுத்ததோடு "விவசாயிகளைக் குறைத்து மதிப்பிட்டமை" எனச் சொல்லப் படுவதற்காக ட்ரொட்ஸ்கியை கண்டனம் செய்தது.

ஸ்டாலினின் கீழான இந்தத் தலைமை இப்புதிய தகவமைவினை கம்யூனிஸ்ட் அகிலத்தின் உள்ளும் விஸ்தரித்தது. இந்தக் காலப் பகுதியிலேதான் சீன முதலாளித்துவ தேசியவாத குவாமின்டாங்குகள் கம்யூனிஸ்ட் அகிலத்தின் ஒரு "அனுதாபக் கட்சி" யாகப் பிரகடனம் செய்யப்பட்டது; பிரித்தானிய தொழிற்சங்க காங்கிரசின் அதிகாரத்துவத்துடன் சேர்ந்து ஆங்கிலோ-ரூஷ்யன் கமிட்டி நிறுவப்பட்டது; அமெரிக்காவில் கம்யூனிஸ்ட் கட்சி லாபொலட் இயக்கத்துடன் தகவமைத்துக் கொண்டது; ஜேர்மனியில் கம்யூனிஸ்ட் கட்சியின் "தேசியப் புரட்சிக்கான" ஆதரவு பாசிஸ்டுகளின் சுலோகத்துடன் போட்டியிட்டது.

## CPY உள்ளேயான போராட்டம்

இந்துப் போக்கின் ஒரு பாகமாக ஸ்டாலின் கன்னை முற்றிலும் மார்க்சிச விரோதுப் பிரேரணையை - பால்கன் தேசியவாதம் ஒரு விவசாயத் தளத்தில் தங்கியுள்ளதால் இயற்[illegible]யிலேயே புரட்சிகரமானது - மு[illegible]வைத்தது. இது CPYஐ அதன் பாட்டாளி வர்க்க அனைத்துலகவாத தகவமைவில் இருந்து தடம்புரளச் செய்து, யூகோசலாவிய அரசினை அழித்தொழிக்கும் போராட்டத்தின் ஒரு கூட்டாக தேசிய, இனக்குழு பிரிவினைவாத இயக்கங்களை வரவேற்கும் ஒன்றாக விளங்கியது.

CPYத் தலைவரான சிமா மார்கோவிக் ஒரு பால்கன் சமஷ்டிக்கான பாரம்பரிய சோசலிசக் கோரிக்கையை ஊர்ஜிதம் செய்ததோடு தேசிய பிரிவினைவாதத்தினை ஊக்குவிக்கும் அழைப்பினை எதிர்த்தார். தொழிலாளர் வர்க்கத்தின் உள்ளே தேசியப் போக்குக்கள் ஊடாக மை[illegible]த்தில் இருந்து விலகும் சக்[illegible]களை ஊக்கப்படுத்துவதன் மூலம் ஒருவர் வர்க்க ஒருமைப்பாட்டினைப் பலப்படுத்தலாம் என எதிர்பார்க்க முடியாது" என அவர் பிரகடனம் செய்தார். (கம்யூனிசமும் யூகோசலாவிய பிரச்சினையும் - போல் சூப் (நியூயோர்க் கொலம்பியா பல்கலைக் கழக அச்சகம் - 1968)

மார்கோவிக் யூகோசலாவிய அரசினை வியந்து பாராட்டியவர் அல்ல. அவர் இதன் ஸ்தாபிதத்தில் இருந்து இதனை எதிர்த்தார். மேலும் அவர் தேசிய, இனக்குழு குறைபாடுகளுக்கு கண்மூடித்தனமான முறையில் முறையீடு செய்வதன் மூலம் கட்சியின் வெற்றியை அடிப்படையாகக் கொள்ளத் தயங்கினார். இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரே சாதனம் தென்சிலாவிய தொழிலாளர் வர்க்கத்தினை போராட்டத்தில் ஐக்கியப்படுத்துவதே என அவர் வலியுறுத்தினார்.

ஆதலால் அவர் முதலாளித்துவக் கட்சிகளில் இருந்து சுயாதீனமான முறையில் தொழிலாளர் வர்க்கத்தினை அணிதிரட்டுவதற்கான ஒரு உபாயக் கருவியாகவும் தேசியப் பிரச்சினைக்கு ஒரு சோசலிசத் தீர்வினை முன்வைத்தும் அரசியலமைப்புச் சட்டம் பற்றிய விவகாரத்தின் மீது ஒரு அரசியல் கிளர்ச்சிக்கு அழைப்பு விடுத்தார்.

ஸ்டாலின் -சினோவியேவ் கன்னை மார்கோவிக்கையும் அவரின் ஆதரவாளர்களையும் ஒரு "வலதுசாரி" பாராளுமன்றவாதப் போக்காகச் சாயம் பூசுவதன் மூலம் இவ்விவகாரத்தில் யூகோசலாவியக் கட்சியினுள் குழப்பத்தினை பரப்ப தம்மால் முடிந்த அனைத்தையும் செய்தது.

தம்மை "இடதுசாரிகள்" எனக் கூறிக் கொண்டு முதலாளித்துவ தேசிய பிரிவினைவாத இயக்கங்களுடன் தகவமைத்துக் கொண்ட மார்கோவிக்கினது எதிரிகளின் கருத்துக்களை மாஸ்கோ தலைமை ஊக்குவித்தது.

மார்கோவிக்கும் CPYன் ஏனைய தலைவர்களும் சிறையிலிடப்பட்டும், மாஸ்கோவில் இருந்து நெருக்குவாரம் கொணரப்பட்டும் வந்த நிலைமையின் கீழ் முதலாளித்துவ தேசிய பிரிவினைவாதத்தினை ஆதரிக்கும் கொள்கை மேல்நோக்கி வளர்ச்சி கண்டது.

## தேசியவாதத்தின் உபாய சுரண்டல்

தேசியவாத உபாயச் சுரண்டல் மீதான இந்த விவாதம் முக்கியமான அரசியல் விவகாரங்களை உள்ளடக்கிக் கொண்டுள்ளது. இவை பால்கனிலும் வேறு எங்கிலும் பாரதூரமான விளைவுகளைத் தொடர்ந்து கொண்டுள்ளன.

இந்தத் திருப்பம், தொழிலாளர் வர்க்கத்தினை அனைத்துலக சோசலிச வேலைத்திட்டத்துக்கு வெற்றிகொள்ளும் சிரமமான பணிக்கு ஒரு குறுக்குவழியை காணும் முயற்சியைக் கொண்டுள்ளது. வேறுபட்ட வர்க்க சக்திகளை அடிப்படையாகக் கொண்ட ஏனைய 'ரேடிமேட்' இயக்கங்கள், அமைப்புக்களின் புரட்சிகரச் சாத்தியங்கள் மிகைப்படுத்தப்பட்டுள்ளன. உலக முதலாளித்துவத்தினை தூக்கி வீசுவதற்கன்றி "நடுநிலை"ப்படுத்துவதை இலக்காகக் கொண்ட கொள்கைகள் தொழிலாளர் வர்க்கத்தின் சோசலிச நனவில் அவை ஏற்படுத்தும் தாக்கத்தையிட்டு அலட்சியமான முறையில் அனுசரிக்கப்படுகின்றன.

இக் கொள்கையின் தாக்கங்கள் ஐந்தாவது காங்கிரசில் அம்பலப்படுத்தப்பட்டது. இக்காலப்பகுதியில் கம்யூனிஸ்ட் அகிலத்தின் உள்ளே அதிகாரத்துவத்தின் ஒரு பிரதான கடமையாளனாகத் தோன்றிய டீ.ஜே. மனுல்ஸ்கி யூகோசலாவியா மீதான பிரதான அறிக்கையை வழங்கினார். பிரிவினைவாதத்துக்கு உலகளாவிய ஆதரவினை வழங்குவது லெனினால் அபிவிருத்தி செய்யப்பட்ட போல்ஷிவிசத்தின் ஒரு அடிப்படைக் கொள்கையாக விளங்கிற்று என அவர் வலியுறுத்தியதோடு யூகோசலாவியக் கட்சி முதலாளித்துவ பிரிவினைவாத இயக்கங்களுடன் ஐக்கிய முன்னணிகளைத் தேடிக் கொள்ள வேண்டும் எனக் கோரினார்.

தனது வாதங்கள் லெனினின் 1913 ஆக்கங்களில் இருந்து பொறுக்கி எடுக்கப்பட்டதாகக் கூறிய மனுல்ஸ்கி, CPY ஒரு தேசிய முதலாளித்துவ ஜனநாயக வேலைத்திட்டத்துக்குச் சாதகமான விதத்தில் சோசலிசப் புரட்சி முன்நோக்கினை கைவிட வேண்டும் என நெறிப்படுத்தினார். அவர் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் மூலோபாய இலக்கில் இருந்து தேசியவாத இயக்கங்கள் தொடர்பான கட்சியின் உபாய மனப்பாங்கினை பெற்ற CPY வேலைத்திட்டத்தின் பகுதிகளைக் குறிப்பாகத் தாக்கினார்.

அதன் 'மத்திய ஐரோப்பா, பால்கன் மீதான பிரேரணை'யில் ஐந்தாவது காங்கிரஸ் குறிப்பிட்டதாவது: "ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் சுயநிர்ணய உரிமை-பிரிந்து செல்லும் அளவுக்கு" என்ற சுலோகம் இன்றைய முன்னோடிப் புரட்சிகர காலப்பகுதியில் புதிதாகத் தோன்றிய இந்த ஏகா[illegible] அரசுகளைப் பொறுத்தமட்டில் பெரிதும் திட்டவட்டமான சுலோகத்தில் வெளிப்பாடாக வேண்டும். 'போலந்து, ரூமேனியா, செக்கோசலவாக்கியா, யூகோசலாவியா, கிரீசிடமிருந்து ஒடுக்கப்படும் மக்கள் அரசியல் ரீதியில் பிரிந்து செல்லல்."

இது லெனினின் நிலைப்பாட்டினை அடியோடு திரிப்பதாகும். லெனின் சுயநிர்ணயத்துக்கான உரிமையை தேசியப் பிளவுகளில் இருந்து தலையெடுக்கவும் பாட்டாளி வர்க்கத்தினை ஐக்கியப்படுத்துவதற்குமான ஒரு கருவியாக ஆதரித்தார். அவர் ஒருபோதும் தேசிய பிரிவினை வாதத்தின் தூதனாக இருந்ததில்லை.

குறிப்பாக யூகோசலாவிய பிரச்சினை மீது கம்யூனிஸ்ட் அகிலம் இப்போது உத்தரவிட்டதாவது: "யூகோசலாவிய கம்யூனிஸ்ட் கட்சியினால் ஆரம்பிக்கப்பட்ட தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்ற பொது சுலோகம் யூகோசலாவியாவில் இருந்து குரோஷியா, சுலோவீனியா, மசிடோனியாவை தனிமைப்படுத்தி அவற்றைக் கொண்டு சுயாதீனமான குடியரசுகளை உருவாக்கும் வடிவில் வெளிப்பாடாக வேண்டும்." (ஹெல்மற் குறூபர்: Soviet Russia Masters the Comintern பக்கம் 134)

குறிப்பாக இந்த விடயத்திலேயே ஸ்டாலின் கம்யூனிஸ்ட் அகிலத்தின் விவகாரங்களில் தனது முதலாவது தலையீட்டை மேற்கொண்டார்.

சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டதன் பின்னர் மார்கோவிக் 1924 மார்ச்சில் கம்யூனிஸ்ட் அகிலத்தின் நிறைவேற்றுக் குழுவின் ஒரு கூட்டத்தொடரில் கலந்து கொண்டார். அதில் அவர் தனது கொள்கையைப் பேணியதோடு முதலாளித்துவ தேசியவாதக் கட்சிகளுடன் ஐக்கிய முன்னணிக்குச் செல்லும் திருப்பத்தின் பேரிலான தனது கருத்துவேறுபாட்டைத் தெரிவித்தார்:

ஸ்டாலின் மாஸ்கோ தலைமைக்கு பதிலளித்ததோடு மார்க்கோவிக்கின் "தவறு" "தேசியப் பிரச்சினையை சாராம்சத்தில் ஒரு விவசாயப் பிரச்சினையாக கணிக்க அவர் மறுப்பதே" எனப் பிரகடனம் செய்தார். ஒழுங்கற்றதும் மலட்டுத்தனமானதுமான ஸ்டாலினின் வாதங்கள் ட்ரொட்ஸ்கிக்கும் இடது எதிர்ப்புக்கும் (Left Opposition) எதிரான அதிகாரத்துவத்தின் சொந்தப் போராட்டத்தில் இருந்தும் அனைத்துலக அரங்கிலான அதன் பாட்டாளிவர்க்க கொள்கையில் இருந்தும் திசைதிருப்புவது என்ற உண்மையில் இருந்தே நேரடியாக ஊற்றெடுத்தன.

"செமிக் (மார்கோவிக்) இந்தச் சூத்திரத்தினை ஏற்கத் தயங்குவது தேசிய இயக்கத்தின் இயற்கையான பலத்தினைக் குறைத்து மதிப்பிடுவதன் காரணமாகவும், தேசிய இயக்கத்தின் ஆழ்ந்த புகழ்பெற்றதும் ஆழ்ந்த புரட்சிகரப் பண்பினை குறைத்து மதிப்பிடுவதன் காரணமாகவே என நாநின் பினைக்கின்றேன். இந்த விளக்கமின்மையும் இந்த குறைத்து மதிப்பீடும் ஒரு பெரும் ஆபத்தை உள்ளடக்கிக் கொண்டுள்ளது. நடைமுறையில் அவை உள்ளடக்கிக் கொண்டுள்ள பலத்தைக் குறைத்து மதிப்பிடுவதை - உதாரணத்துக்கு தேசிய விமோசனத்துக்கான குரோஷியர்களின் இயக்கத்தில் உணர்த்துகின்றது." (அதே நூல் பக்கம்-14)

பால்கன் பூராவும் இதே நிலைப்பாடுகளே வாதிக்கப்பட்டன. இந்தவிதத்தில் கம்யூனிஸ்ட் அகிலம் ட்ரான்சில்வேனியாவினுள் (ரூமேனிய மாகாணம்) ஹங்கேரியர்களின் தேசபக்த நிலைப்பாடுகளுக்கு

8 ம் பக்கம் பார்க்க

## யூகோசலாவிய கம்யூனிஸ்ட் கட்சியும் தேசிய பிரிவினைவாதமும்



1941ல் பொஸ்னியாவில் உஷ்ராஷி பாசிசப் பயங்கரத்தின் பலிகடாக்கள். 1928ல் மாஸ்கோ யூகோசலாவிய கம்யூனிஸ்ட் கட்சியின் முழுத் தலைமையையும் நீக்கியது. இச்சமயத்தில் கிரேம்ளின் முன்வைத்த தேசியக் கொள்கை ஒரு வெறிபிடித்த கட்டத்தை எட்டியது. மாஸ்கோவின் வழிகாட்டலின் கீழ் முசோலினியின் பாசிசத்தினால் ஈர்க்கப்பட்ட குரோஷியன் பயங்கரவாத அமைப்பான உஷ்டாஷேயை ஒரு முற்போக்கானதாக கணிக்கும் அளவுக்கு இக்குழப்பமான போக்கு வளர்ச்சி கண்டது. CPYன் வேலையின் பெரும்பகுதி குரோஷியன் பாசிஸ்டுகளுடன் ஒரு கூட்டினைத் தேடிக் கொள்வதாகியது.



ஜோசிப் புரோஷ்-டிட்டோ (இடது) 1944ல் 'பாட்டிசன்' தலைவர்களுடன். டிட்டோவின் தலைமையில் 1930 பதுகளில் யூகோசலாவிய கம்யூனிஸ்ட் கட்சி மீளமைக்கப்பட்டது. இந்தப் போக்கு யூகோசலாவிய கம்யூனிஸ்டுகளில் பெருந்தொகையானோரை ஒழித்துக்கட்டும் சோவியத் அதிகாரத்துவத்தின் வேலையுடன் கைகோர்த்துச் சென்றது. இது சோவியத் யூனியனில் 1917 அக்டோபரின் முழுப் புரட்சிகரத் தலைமுறையையும் ஒழித்துக் கட்டியது. CPYன் மீளமைப்பு தேசிய பிரிவினைவாதத்தினை கட்சியின் அமைப்புடன் இணைத்துக் கொண்டது.



1960 பதுகளில் யூகோசலாவியத் தொழிலாளர்களின் ஒரு கூட்டம். டிட்டோவின் யூகோசலாவியாவில் பொருளாதார நலன்கள் இனக்குழு தேசியவாதத்தினை புத்துயிர் பெறச் செய்வதை அடிப்படையாகக் கொண்டிருந்தன. யூகோசலாவிய் வரலாறு பற்றிய எந்தவொரு ஆழமான ஆய்வும் இன்றைய காலப்பகுதியில் தேசியவாதத்தின் வெடிப்பானது ஏதோ பழைய குரோஷியன், சுலோவீனியன், முஸ்லீம் அல்லது மசிடோனியன் 'சுயநிர்ணயத்துக்கான' தவிர்க்க முடியாத ஒரு வெளிப்பாடாக அன்றி நான்கு தசாப்தங்களுக்கு மேலாக டிட்டோவும் அவரின் வாரிசுகளும் கையாண்ட திட்டவட்டமான பொருளாதாரக் கொள்கைகளின் பெறுபேறாகும் என்பதைக் காட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டுஸ்லாவுக்கான பாதை

# சுலோற்றரின் தொழிலாளர் புரட்சிக் கட்சி பால்கனில் ஏகாதிபத்தியத்துக்கு உதவுவது எப்படி?

*7 பக்கத் தொடர்ச்சி*

புரட்சிகரப் பண்பைக் கற்பித்த தோடு அந்தப் பிராந்தியத்தினையும் டொப்றுட்ஜா, பெசாரபியா, புகோவினாவையும் ரூமேனியாவில் இருந்து பிரிக்கத் தூண்டியது.

### கம்யூனிஸ்ட் கட்சியின் முடிவு

கம்யூனிஸ்ட் அகிலத்தினால் திணிக்கப்பட்ட வழிமுறைகள் யூகோசலாவிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு பேரழிவான பெறுபேறுகளைக் கொணர்ந்தது.

கம்யூனிஸ்ட் அகிலம் புதிய தகவமைவினை நடைமுறைக்கிட்ட முதல் இடங்களில் மசிடோனியா ஒன்று. 1924 ஏப்பிரலில் இது பல்கேரிய அரசாங்கத்தின் ஆதரவினைக் பெற்று, ஒரு பயங்கரவாதப் பிரிவினை அமைப்பான அனைத்துலக மசிடோனியன் புரட்சிகர அமைப்புடன் (I.M.R.O.) பேரம்பேசல்களில் ஈடுபட்டது. உடன்படிக்கை வரைவு மசிடோனியாவின் "விடுதலைக்கும் இணைப்புக்கும்" அழைப்பு விடுத்தது. இந்த உடன்படிக்கை அப்பிராந்தியத்தின் சகல கம்யூனிஸ்ட் கட்சிகளையும் மசிடோனியாவின் மீது அரசுரிமை கோரும் பல்வேறு பால்கன் அரசுகளதும் அற்ப பிராந்தியத் தகராறு சக்தியில் சிக்கவைக்க உதவியது.

வரலாற்றாசிரியரான போல் சூப் மசிடோனியன் பிரிவினை வாதிகளுடனான கம்யூனிஸ்ட் அகிலத்தின் கூட்டின் பெறு பேறுகளை வருணித்ததாவது: "இந்த உடன்படிக்கையின் பிரசுரத்துடன் குழப்பங்கள் தொடங்கின. மசிடோனியாவில் உள்ள கட்சிக்கு உதவுவதற்கு மாறாக IMRO உடனான கூட்டு அதிக அளவிலான கற்பனை செய்யக்கூடிய தடுமாற்றங்களை உருவாக்கியது. இந்தச் சூழ்ச்சியின் ஒரு பாகமாக பல்கேரிய கம்யூனிஸ்டுகள் 1924 மார்ச்சிலும், யூலையிலும் பால்கன் கம்யூனிஸ்ட் பெடரேசனை பிரேரணைகளை இயற்றச் செய்வதில் வெற்றி கண்டது. அவை அவர்களின் நலன்களுக்குப் பெரிதும் சாதகமாக இருந்ததோடு மசிடோனியன் பிரச்சினையில் பல்கேரிய பாத்திரத்தினையிட்டு எந்தவொரு விமர்சனத்தினையும் தள்ளி வைத்தன. அவமானத்துக்குள்ளான கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சி முதலில் பால்கன் கம்யூனிஸ்ட் பெடரேசனின் மார்ச் கூட்டத்தில் இயற்றப்பட்ட பிரேரணையை பிரசுரிக்க மறுத்துவிட்டது. யூகோசலாவிய கம்யூனிஸ்ட் கட்சி மசிடோனியா இணைப்புக்கும் சுய[illegible] பெடரேசன் பிரேரணையில் குறிப்பிடப்பட்ட கோரிக்கையை எதிர்த்தது. IMRO பிரகடனம் வெளியானதும் CPY திட்டத்தினை நிராகரித்ததோடு கட்சி அங்கத்தவர்கள் அதற்குத் தமது ஆதரவினை வழங்குவதைத் தடுத்தது. இக்கட்டத்தில் கம்யூனிஸ்ட் அகிலம் CPYன் ஒரு சிறப்புத் தூதுக்குழுவை மாஸ்கோவுக்கு வரவழைத்ததாகவும் 1924 மேயில் IMRO நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ளும்படி அவர்களை நெருக்கியதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

"மறுபுறத்தில்... IMRO பல்கேரியன் அரசாங்கத்தின் நெருக்குவாரத்தின் கீழ் ஏப்ரல் உடன்படிக்கையைக் கைவிட்டது. அமைப்பினுள் ஆட்சிக்கான ஒரு கசப்பான போராட்டம் வெடித்தது. இதன் பெறுபேறாக எந்தவொரு விதத்திலும் உடன்படிக்கையுடன் சம்பந்தம் கொண்டிருந்தோர். கொலையின் மூலம் மரணத்தைச் சந்தித்தனர். (கம்யூனிசமும் யூகோசலாவிய தேசியப் பிரச்சினையும் பக்கம் 31–33)

### மாஸ்கோ ரடிக்கை அரவணைத்துக் கொண்டது

பிரிவினை வாதத்துக்கான இந்தத் திருப்பத்தில் புகழ்பெற்ற சந்தர்ப்பம் குரோஷியன் தேசியவாதத்தினையும் குறிப்பாக அத்தருணத்தில் குரோஷியன் முதலாளி வர்க்கத்தின் முன்னணிக் கட்சியான ரடிக்கின் விவசாயிகள் கட்சியை நோக்கிய தகவமைவாகும்.

ரடிக் மாஸ்கோவுக்கு ஐந்தாவது காங்கிரசுக்குத் தருவிக்கப்பட்டு விவசாயிகள் அகிலத்தின் ஒரு அங்கத்தவராக அமர்த்தப்பட்டார். ஸ்டாலின் தலைமை ரடிக்குடனான உடன்படிக்கையை ஒரு மாபெரும் வெற்றியாகக் கொண்டாடிய அதே வேளையில் ட்ரொட்ஸ்கி இதனை வெறுத்து ஒதுக்கினார். வரைவு வேலைத்திட்டம் பற்றிய விமர்சனத்தில் அவர் பின்னர் குறிப்பிட்டது போல்: "குரோஷியன் பணக்கார விவசாயிகளின் வங்கித் தலைவரான ரடிக் அமைச்சரவைக்குச் செல்லும் வழியில் தனது தரிசன அட்டையை (visiting card) விவசாயிகள் அகிலத்திடம் விட்டுச் செல்வது அவசியமெனக் கண்டார். ஓராண்டுக்குச் சற்று பின்னர் ரடிக் மன்னர் அலக்சாந்தரின் அரசாங்கத்தில் ஒரு அமைச்சரானார்.

இந்தச் சூழ்ச்சி CPYயின் உள்ளே கணிசமான அளவு எதிர்ப்பினைத் தூண்டிவிட்டது. கட்சியின் ஒரு பகுதியினர் கம்யூனிஸ்ட் அகிலத்தின் நிலைப் [illegible] வெளியிட்டதோடு "சமூக-பொரு ளாதார, வர்க்க நலன்களை இரண்டாம் இடத்துக்குத் தள்ளிவிட்டு தேசியப் பிரச்சினைக்கு இவ்வளவு முக்கியத்துவம் வழங்க முடியாது" என எச்சரிக்கை செய்தது. இந்தக் கன்னையின் ஒரு தலைவரான சிவோட்டா மிலோஜ்கோவிக் பெல்கிரேட் தொழிலாளர் இயக்கத்தில் ஒரு பிரபல்யமான புள்ளியாவார். அவர் இந்தக் கொள்கையை குரோஷியன் முதலாளி வர்க்கத்துடன் கலந்துறவாடுவது எனவும் மார்க்கிசத்தைக் காட்டிக்கொடுப் பதெனவும் கண்டனம் செய்ததோடு இன்னும் பலருடன் சேர்ந்து கட்சியில் இருந்தும் இராஜினாமாச் செய்தார்.

ரடிக் மாஸ்கோவுடனான அவரது உடன்படிக்கையை உதறித்தள்ளிவிட்டு பெல்கிரேட் ஆட்சியாளர்களுடன் இணைந்து கொண்டதன் பின்னரும் கூட கம்யூனிஸ்ட் அகிலம் குரோஷியன் விவசாயிகள் கட்சியுடன் கலந்துறவாடுவதற்காகத் தொடர்ந்து வக்காலத்து வாங்கியது. அக்காலத்தின் ஒரு CPY பத்திரத்தின் படி இந்த அனுபவம் அங்கத்தவர்களை 'சோர்வு, செயலின்மை, நம்பிக்கையீனத் தினுள்' தள்ளியது.

1928ல் மாஸ்கோ மார்கோவிக் உட்பட – ஒரு தசாப்த காலத்தின் பின்னர் ஸ்டாலினின் சிறை முகாம்களில் கொல்லப்பட இருந்தவர் – முழு யூகோசலாவிய தலைமையையும் பதவி நீக்கம் செய்தது. இச்சமயத்தில் கிரேம்ளினால் முன்வைக்கப்பட்ட தேசியக் கொள்கை "வெறி" கொண்ட மட்டத்தினை எட்டியது.

ஏற்கனவே பட்டியல்போட்டுக் காட்டப்பட்ட தேசியவாதக் குழுக் களுக்கு மேலதிகமாக கோசா வாவில் இருந்த அல்பேனியன் சிறுபான்மையினர் ஒரு தனி அரசினை அமைக்கும்படி உத்சாகப் படுத்தப்பட்டனர்.

மாஸ்கோவின் வழிகாட்டலின் கீழ் CPY உள்ளேயான குழப்பம் முசோலினியின் பாசிசத்தினால் ஈர்க்கப்பட்ட குரோஷியன் பயங்கர வாத இயக்கமான உஷ்டாசேயை (Ustashe) ஒரு முற்போக்கானதாக நோக்கும் அளவுக்குச் சென்றது. CPYன் வேலைகளில் பெரும் பகுதி குரோஷியன் பாசிஸ்டுகளுடன் ஒரு கூட்டினைத் தேடிக் கொள் வதாகியது.

போல் சூப் தேசியப் பிரிவினைவாதத்தினை நோக்கிய இந்தப் போக்கினது முழுத் தாக்கத்தினையும் பற்றி அறிவுபூர்வமாகக் குறிப்பிடுகின்றார்: "கோமின்டான் திரும்பத் திரும்ப புரட்சியில் கிஞ்சித்தும் அக்கறை கிடையாத கருத்துமுரண்பட்ட தேசியவாதக் குழுக்களுடன் கலந்துறவாடும்படி நெருக்கி வந்தது. இதன் தவிர்க்க முடியாத பெறுபேறாக தேசிய எதிர்ப்பின் முக்கியத்துவம் புரட்சிகர இலக்கு களுடனான அதன் சம்பந்தத்தின் பதங்களில் வரையறுக்கப்படாது தேசியப் போக்கின் பதங்களில் புரட்சிகரக் குழுக்கள் எனக் கணிக்கத் தள்ளப்பட்டது.

"கோமின்டானின் இந்தத் தப்புக் கணக்கு – இது மிகவும் அடிப்படையான ஒன்று – தேசிய வாத இலக்குகளை ஒரு புரட்சி மட்டுமே திருப்தி செய்து வைக்கும் என்பதை அவற்றிற்கு புரிய வைப்பின் தேசியவாத இயக்கங்கள் கம்யூனிசத்தை ஏற்றுக்கொள்ளும் என்ற ஊகத்தினை அடிப்படை யாகக் கொண்டுள்ளது." (அதே நூல் பக்கம் – 36)

யூகோசலாவியாவில் மன்ன ராட்சியின் சர்வாதிகாரம் பிரகடனம் செய்யப்பட்ட 1929ம் ஆண்டில் CPY உள்ளார்ந்த ரீதியில் அதன் பாட்டாளிவர்க்க, சோசலிச வேலைத்திட்டத்தின் குலைப்புக் காரணமாகச் சிதறடிக்கப்பட்டது. அரசின் ஒடுக்குமுறையின் அழுத்தங்களின் கீழ் அது விரைவாகச் சரிந்து கொட்டியது.

1933ல் ஹிட்லர் ஆட்சிக்கு வந்ததோடு மாஸ்கோ ஸ்டாலினிச அதிகாரத்துவம் – முன்னைய போக்கினைப் பற்றி எதுவிதமான விமர்சனமும் இல்லாமல் – சுயநிர்ணயம் பற்றிக் குறிப்பிடுவதை அடியோடு கைவிட்டதோடு, CPY மீது பெல்கிரேட் அரசாங்கத்துக்கும் யூகோசலாவிய ஐக்கியத்துக்கும் ஆதரவு வழங்கும் அடிப்படை யிலான ஒரு மக்கள் முன்னணிக் (Popular Front) கொள்கையைத் திணித்தது.

ஸ்டாலினிசம் முதலாளித்துவ தேசியவாதத்துக்கு இயைந்து போவதை என்றுமே கைவிட்டது கிடையாது. மாஸ்கோ அதிகாரத்து வத்தின் உடனடியான வெளிநாட்டுக் கொள்கை நலன் களுக்குச் சேவகம் செய்யும் விதத்தில் அழுத்தம் கொடுப்பதை வெறுமனே மாற்றியது. ஒரு ஐக்கியப்பட்ட யூகோசலாவியா வானது பால்கனில் ஜேர்மனியின் விஸ்தரிப்பினைச் சமப்படுத்து வதற்கான ஒரு அவசியமாக நோக்கப்பட்டது.

– தொடரும் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசிசம் மீண்டும் எழுச்சி காண்பது ஏன்?

அமெரிக்க ட்ரொட்ஸ்கிச இதழான 'இன்டர்நஷனல் வேர்க்சஸ் புலட்டினின்' -ஜுன் 6- முன்பக்கத் தலைப்புச் செய்தி

நேச நடுகள் நாசிகளினால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரான்சினுள் படையெடுத்த ஐம்பதாவது ஆண்டு நிறைவு, 1920பதுகளிலும் 1930பதுகளிலும் பாசிசத்தின் எழுச்சியினதும் இரண்டாம் உலகப் போரின் பேரழிவுகளதும் படிப்பினைகளை வெளிச்சம் போட்டுக் காட்டுவதற்கு மாறாக அதனை இருட்டடிப்புச் செய்யும் உத்தியோக பூர்வமான கொண்டாட்டங்களுக்கும் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களது அலணகட்டல்களுக்கும் ஒரு சந்தர்ப்பமாகியுள்ளது.

யுத்தகால நேச நாடுகளின் இன்றைய தலைவர்கள் ஜுன் 6ம் திகதிய ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக நோர்மன்டி கடற்கரையில் கூடுவார்கள். தங்களது உடனடி அரசியல் நோக்கங்களுக்காக நிகழ்வினை சுரண்டிக்கொள்ளும் முகமாக அவர்கள் மிகவும் அவமானம் நிறைந்த வரலாற்றுப் பொய்மைப்படுத்தல்களை பிரகடனம் செய்கிறார்கள்.

நாசி ஜேர்மனியின் இராணுவத் தோல்வியில் மிகவும் தீர்க்கமான ஒரு பாத்திரத்தினை வகித்ததும் ஐரோப்பாவில் வேறு எந்தவொரு நாட்டினைக் காட்டிலும் வேர்மட்டின் (Wehrmaeht) கரங்களால் பிரமாண்டமான மரணங்களையும் அழிவுகளையும் அனுபவித்ததுமான தமது யுத்தகாலக் கூட்டான மாஜி சோவியத் யூனியனை இந்த அனுஷ்டானங்களில் இருந்து அவர்கள் தள்ளி வைத்துள்ளார்கள்.

இந்த D-Day பற்றிய பத்திரிகைச் செய்திகளில் இருந்தும் தொலைக்காட்சிச் சிறப்பு நிகழ்ச்சிகளில் இருந்தும் ஒருவர் இந்த D-Day காலத்தில் செஞ்சேனையின் எதிரில் ஏற்கனவே பின்வாங்கிக் கொண்டிருந்த ஹிட்லரின் நீண்ட இராணுவ வாகனம் முதலில் ஸ்டாலின் கிராட்டிலேயே தடுத்து நிறுத்தப்பட்டது என்பதையும், 1944 ஜுனில் பிரான்சைக் காட்டிலும் பிரமாண்டமான படைகள் கிழக்கு முனையில் இருந்தன என்பதையும் அறிந்து கொள்ள முடியாது.

எவ்வாறெனினும் எவ்வளவு தான் இவர்கள் முயன்றாலும் D-Dayஐ பாசிசத்துக்கு எதிரான ஒரு புனிதப் போராகக் காட்டும் உத்தியோக பூர்வமான விவரணங்களுக்கும் ஐரோப்பா ஊடான இன்றைய பாசிசக் கலவரங்களுக்கும் இடையேயான முரண்பாடுகளை இத் தலைவர்கள் மூடிமறைத்துவிட முடியாது.

D-Day கொண்டாட்டங்களின் சிடுமூஞ்சி பாசாங்குகளை பில்கிளின்டன் தொகுத்துக் கூறியுள்ளார். இரண்டு கிழமைகளுக்கு முன்னர் அமெரிக்க கடற்படை அக்கடமியில் பேசிய அவர் யுத்தம் 'சர்வாதிகாரத்தின் இருண்ட துயரங்களை வெல்லவும் ஜனநாயகத்தினதும் சுதந்திரத்தினதும் ஒரு நீரோட்டத்தினை தொடக்கவுமான'' ஒரு போராட்டம் என்றார். அடுத்த வாரம் அவர் D Day நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் பொருட்டு ஐரோப்பா பயணத்தை ஆரம்பித்து — ரோமில் தரித்துச் சென்றார். அங்கு அவர் புதிய இத்தாலியப் பிரதமர் சில்வியோ பேர்ளுஸ்கோனியைச் சந்திக்கும் முதலாவது அரச தலைவரானார். அவரது வலதுசாரி அரசாங்கம், பாசிச தேசிய முன்னணிக் கட்சியின் ஐந்து அமைச்சர்களை உள்ளடக்கிக் கொண்டுள்ளது.

முதலாளித்துவ ஜனநாயகத்தின் தவிர்க்க முடியாத மோசடியை வெளிக்காட்டும் விதத்தில் கிளின்டன் பாசிஸ்டுகளுடனான கூட்டினை அடிப்படையாகக் கொண்ட ஒரு அரசாங்கத்தினை ''ஜனநாயகத்துக்கு அளப்பரிய முறையில் அர்ப்பணம் செய்து கொண்டுள்ளது'' எனப் பிரகடனம் செய்வதன் மூலம் நாசி ஆக்கிரமிப்பில் இருந்து இத்தாலியின் விடுதலையின் ஆண்டு நிறைவினைக் கொண்டாடியுள்ளார்.

கடந்த வாரம் பேர்ளுஸ்கோனியின் கூட்டின் ஒரு ''ஜனநாயகவாதி'' ஐரோப்பிய பாராளுமன்றத் தேர்தலுக்கான தேசியக் கூட்டின் ஒரு வேட்பாளரான பீரோ புஸ்காரோலி, மக்கள் கைது செய்யப்பட்டு அரசியல் சிறை முகாம்களில் தள்ளப்பட வேண்டும் எனப் பிரகடனம் செய்தார்.

அதே வாரத்தில் இத்தாலியப் பாராளுமன்றம் தனது வெளிநாட்டு விவகார ஆணைக்குழுவுக்குத் தலைமை தாங்க தேசியக் கூட்டின் அங்கத்தவரான மிர்கோ ரிமக்லியாவை தெரிவு செய்தது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ரிமக்லியா ஹிட்லரின் ஆக்கிரமிப்புப் படைகளுடன் சேர்ந்து முசோலினிக்காகப் போரிட்டவர். பேர்ளுஸ்கோனியின் தேர்தல் கூட்டின் ஒரு பாகமாக அவர் தெரிவு செய்யப்பட்டதில் இருந்து அவர் முன்னைய யூகோசலாவியாவின் பிராந்தியத்துக்கான இத்தாலியின் கோரிக்கையினை முன்வைத்தார்.

## ஐரோப்பா பூராவும் பாசிசத்தின் புத்துயிர்ப்பு

ஐரோப்பாவில் பாசிச சக்திகளின் எழுச்சி எந்தவிதத்திலும் இத்தாலிக்கு மட்டும் கட்டுப்பட்டதல்ல. கிழக்கு ஐரோப்பாவின் முன்னைய ஸ்டாலினிச நாடுகள் அனைத்திலும் ருஷ்யாவின் ஷிரிநோவ்ஸ்கியின் கட்சி [illegible] றவை யூதர் எதிர்ப்பு[illegible] ஆகியவற்றை ஊக்கப்படுத்தும் அதிதீவிர தேசியவாத இயக்கங்கள் வளர்ச்சி கண்டு வருகின்றன. கடந்த மாதம் பிரான்ஜோ ருட்ஜ்மன் தனது நாட்டின் பண நோட்டுக்களை நாஸி ஆதரவு உஷ்ராஷே ஆட்சியினால் பயன்படுத்தப்பட்டவற்றின் பெயருக்கு மாற்றம் செய்தார். இந்த ஆட்சி 1941-45க்கும் இடைப்பட்ட காலத்தில் இலட்சோபலட்சம் யூதர்கள், சேர்பியர்கள், ஜிப்சியர்களை கொன்றுதள்ளியது,

பிரான்சில் லீ பென்னின் பாசிச தேசிய முன்னணி இருந்து வருகின்றது. இத்தகைய கட்சிகள் பெல்ஜியம், நெதர்லாந்து, ஆஸ்திரியா டென்மார்க்கிலும் வளர்ச்சி கண்டு வருகின்றது. கிளின்டனதும், மற்றும் முதலாளித்துவத் தலைவர்களதும் ஜனநாயகக் கூச்சல்களின் ஆபத்தான தாக்கங்களை பாசிசத்தையும் இரண்டாம் உலக யுத்தத்தின் மூலத்தினையும் வரலாற்று ரீதியில் புரிந்து கொள்வதன் மூலம் மட்டுமே புரிந்து கொள்ள முடியும்.

பாசிசம் முதலாளித்துவ பிரதிபலிப்பின் ஒரு மிகவும் பயங்கரமான வடிவமாகும். முசோலினியின் கறுப்புச்சேட்டுக்காரர்களும் ஹிட்லரின் ஊதா சட்டைக் காரர்களும் மார்க்சிசத்துக்கும் சோசலிச இயக்கத்துக்கும் எதிராகவே நெறிப்படுத் தப்பட்டனர். ''போல்ஷிவிசத்தை ஒழித்துக்கட்டும் கிருமி நானே'' என ஹிட்லர் வாயடித்துக் கொண்டார்.

1930பதுகளில் பொருளாதார மந்தத்தின் ஆரம்பத்துடனும் சோசலிசப் புரட்சியின ஆபத்தின் எழுச்சியுடனும் பெரும் வர்த்தக நிறுவனங்கள் பாசிச இயக்கங்களுக்கு ஊக்கமளித்தன. இவை ஆரம்பத்தில் தமது ஆதரவினை குழம்பிப் போய்க் கிடந்த மத்தியதர வர்க்கத் தட்டினரிடமிருந்தே பெற்றனர். 1922ல் இத்தாலியிலும் 1933ல் ஜேர்மனியிலும் பின்னர் ஸ்பானியாவிலும் கிழக்கு ஐரோப்பாவின் இன்னும் பல நாடுகளிலும் கைமெகட்ட பாசிச சர்வாதிகாரங்கள் தொழிலாளர் இயக்கத்தின் உடைந்த எலும்புகளின் மீதாக ஆட்சிக்கு வந்தன. அவை ஆட்சியை கைப்பற்ற முடியாது போன இடங்களிலும் பயங்கரமான பாசிச இயக்கங்கள் ஐரோப்பாவின் ஏனைய பாகங்களில் எழுச்சி கண்டன.

ஜனநாயகங்கள் எனப்பட்ட அமெரிக்காவும் பிரித்தானியாவும், பிரான்சும் முசோலினியையும் ஹிட்லரையும் ஆதரித்ததோடு நாஸி ஆட்சி பெருகி வரும் அதன் இராணுவ பலத்தினை சோவியத் யூனியனுக்கு எதிராகப் பயன்படுத்தும் என எதிர்பார்த்தன. பாசிச அரசாங்கங்களின் ஏகாதிபத்திய எதிர்பார்ப்புக்கள் தமது சொந்த காலனித்துவப் பிடிகளை[illegible]ம் [illegible]னும் மோதிக் கொண்டதைத் தொடர்ந்தே வாஷிங்டனும் லண்டனும் பாரிசும் ஹிட்லர், முசோலினிக்கு எதிராக அணிதிரண்டன.

பாசிச ஆட்சிகள் வரலாறு முன்னொருபோதும் கண்டிராத அளவில் அட்டூழியங்களை இழைத்தன. அவை இருபதாம் நூற்றாண்டின் தொழில் நுட்பத்தினை பரந்த அளவிலான அடக்கு முறைகளையும், சித்திரவதைகளையும், கொலைகளையும், அடிமை ஊழிய அமைப்புக்களையும் செய்ய பயன்படுத்தினர். நாஸிகள் கட்டாய ஊழிய முகாம்களை நிறுவுவதன் மூலமும், இலட்சோபலட்சம் யூதர்களையும் ஏனையோரையும் ஆஸ்விட்ஸ், புச்சன்வால்ட், டச்சா, ட்ரிப்ளிங்கா நச்சுவாயு முகாம்களில் தள்ளி ஒழித்துக்கட்டுவதன் மூலமும் முதலாளித்துவ சீரழிவின் உள்ளார்ந்த காட்டுமிராண்டிதனத்துக்கு பூரண உருவம் கொடுத்தனர்.

## ஸ்டாலினிசமும் சமூக ஜனநாயகமும் தொழிலாளர் வர்க்கத்தை காட்டிக் கொடுத்தது எப்படி?

1920களிலும் 1930பதுகளிலும் இந்த ஆட்சிகள் தொழிலாளர்களின் வீரியம் மிக்க போராட்டங்களுக்கு இடையேயும் ஆட்சிக்கு வந்தன. காரணம், தொழிலாளர் வர்க்கம் ஸ்டாலினிஸ்டுகளாலும் சமூக ஜனநாயகவாதிகளாலும் காட்டிக் கொடுக்கப்பட்டதே. இந்த சந்தர்ப்பவாத அதிகாரத்துவங்கள் தொழிலாளர் வர்க்கத்தினை புரட்சிகரமான முறையில் அணிதிரட்டுவதனைத் தடுக்க தமது சக்திக்கு உட்பட்ட அனைத்தையும் செய்தன. ஜேர்மனியில் நாஸி வெற்றியின் பேரழிவுமிக்க அனுபவத்தின் பின்னர் ஸ்டாலினின் கொமின்டானும் (Com. Internatonal) ஐரோப்பாவில் இருந்த அதன் கம்யூனிஸ்ட் கட்சி செய்மதிகளும் மக்கள் முன்னணி கொள்கையில் இறங்கின. அவை தொழிலாளர் வர்க்கத்தினை முதலாளித்துவத்தின் தாராண்மை கட்சிகளுக்கு தொழிலாளர் வர்க்கத்தினைக் கீழ்ப்படியச் செய்ததோடு ''ஜனநாயக''த்துக்கான வெறும் அழைப்புக்களுக்குச் சாதகமாக சோசலிசத்துக்கான புரட்சிகரப் போராட்டத்தினைக் கைவிட்டனர்.

இந்த எதிர்ப்புரட்சிக் கொள்கை தொழிலாளர் வர்க்கத்தின் மேலாய தோல்விகளுக்கு—எல்லாவற்றுக்கும் மேலாக ஸ்பெயினில்—இட்டுச் சென்றது. அங்கு ஸ்டாலினிசம் ஜெனரால் பிராங்கோவின் பாசிச ஆயுதக் கிளர்ச்சியால் அனல் பறக்கச் செய்த தொழிலாளர் எழுச்சியை நசுக்குவதில் ஒரு தீர்க்கமான பாத்திரத்தினை வகித்தது. ஸ்பெயின் நிரூபித்தது போன்று தொழிலாளர் அதிகாரத்துவங்கள் எந்தவொரு நிலைமையின் கீழும் பாசிசத்துக்கு எதிரான போராட்டம் புரட்சிகரப் பரிமாணத்தினை எடுக்க இடமளிக்க மாட்டா.

இக்காட்டிக் கொடுப்புக்களும் தோல்விகளும் இரண்டாம் உலக யுத்தத்துக்கான களத்தினை ஏற்படுத்தின. இது போட்டி முதலாளித்துவ கும்பல்கள் காலனிகள், சந்தைகள், மூலப்பொருட்களுக்கான மூலங்கள், ஊழிய சக்திகளைக கட்டுப்படுத்த நடாத்திய ஒரு ஏகாதிபத்திய யுத்தமாக விளங்கியது. கிழக்கில் மட்டுமே ஹிட்லரினால் எதிர்கொள்ளப்பட்ட சோவியத் யூனியனின் யுத்தம் ஒரு வேறு பண்பினைக் கொண்ட யுத்தமாக விளங்கிற்று. அங்கு பிரச்சினை ருஷ்யப் புரட்சியின் சமூக வெற்றிகளை தூக்கி வீச நாஸி ஜேர்மனி முயன்றது,

சோவியத் தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிரான ஸ்டாலினிச ஆட்சியின் குற்றங்களுக்கும், ஜேர்மன் ஆக்கிரமிப்பின் பேரிலான ஸ்டாலினின் தயாரின்மைக்கும் இடையேயும் சோவியத் தொழிலாளர்களும், விவசாயிகளும் நாஸிப் படைகளுக்கு எதிராக ஒரு பலம்வாய்ந்த போராட்டத்தினை நடாத்தின. அவர்களின் எதிர்த்தாக்குதல் உலகம் பூராவும் உள்ள தொழிலாளர்களை ஊக்குவித்ததோடு 1941ல் ஐரோப்பாக் கண்டத்தினை ஆளுமைக்குள்ளாக்கிய பாசிசத்துக்கு எதிரான தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு அனைத்துலகக் கிளர்ச்சியின் ஆரம்பமும் ஆகியது.

யுத்தம் இத்தாலி, கிறீஸ், பிரான்ஸ், கிழக்கு ஐரோப்பாவில் ஒரு புதிய புரட்சிகர எழுச்சியை உருவாக்கியது. மாஸ்கோவின் ஸ்டாலினிச ஆட்சியும் ஐரோப்பாவில் இருந்த அதன் கட்சிகளும் இந்த இயக்கத்தினைக் குழிபறிக்கவும், தொழிலாளர் வர்க்கத்தினைத் திரும்பவும் முதலாளிகளுக்கு அடிபணியச் செய்யவும் ஒரு தீர்க்கமான பாத்திரத்தினை வகித்தன. 1945ல் ஸ்டாலின் ரூஷ்வெல்டையும் சேர்ச்சிலையும் யால்டாவில் சந்தித்ததோடு மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் கிரீசிலும் சிதறடிக்கப்பட்ட முதலாளித்துவ ஆட்சியை மீண்டும் ஸ்தாபிதம் செய்வதை உத்தரவாதம் செய்யும் ஒரு யுத்தத்தின் பின்னைய தீர்வுக்கு இணங்கினார்.

ஸ்டாலினிசத்தின் காட்டிக் கொடுப்புக்கள் மேற்கு ஐரோப்பாவில் முதலாளித்துவத்தின் மறுஸ்திரப்பாட்டிற்கான அரசியல் அடிப்படையை வழங்கியது. அதைத் தொடர்ந்து யுத்தத்தின் பின்னைய செழிப்பு எனப்பட்ட 25 ஆண்டுக்கால பொருளாதாரப் பெருக்கம் ஏற்பட்டது. இது தொழிலாளர் இயக்கத்தின் சந்தர்ப்பவாதத்தின் பெருக்கத்தினை மேலும் போஷித்தது.

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நரசிம்மராவ் அமெரிக்க விஜயம்:

# அணுவாயுத கட்டுப்பாட்டு ஒப்பந்தமும் பப்லோவாதமும்

மே18 — 19ம் திகதிகளில் ரசிம்மராவ் அமெரிக்காவிற்கு மேற்கொண்ட விஜயத்தை இந்திய — அமெரிக்க உறவிலான வேறுபாடெனக் காட்ட ஆளும் இந்திய காங்கிரஸ் பெரிதும் முயற்சிக்கிறது. இந்த வேறுபாட்டின் தன்மை எத்தகையது என்பதை நரசிம்மராவின் அமெரிக்க விஜயத்தின்போது அமெரிக்க ஆளும் வர்க்கம் எடுத்த ஏற்பாடுகளிலிருந்தும், அமெரிக்காவில் ராவிற்கு கிடைத்த வரவேற்பிலிருந்தும் நன்கு விளங்கிக் கொள்ளமுடியும்.

இதற்கு முன்னர் நேரு — காந்தி காலத்தில் இந்தியப் பிரதமர்களுக்கு வழங்கப்பட்ட வரவேற்பு ராவிற்கு இம் முறை கிடைக்கவில்லை. அத்துடன் அவரது விஜயம் சர்தாரணமான ஒன்றாகவே —அதாவது ''இராஜாங்க விஜயம் அல்ல'' என்றரீதியில் கணிப்பிடப்பட்டதை காணலாம். அவருக்கு கிடைத்த சாதாரண மரியாதைகளிலிருந்து இது நன்கு தெளிவு. அமெரிக்க செய்தித் தொடர்பு சாதனங்களும் அவரது விசயத்தை சற்றும் பொருட்படுத்தவில்லை. அமைச்சர் சபையில் அவா பேசியபோதும் ஆசனங்கள் காலியாகயிருந்தன. ராவ் அமெரிக்காவுக்கு ஏகாதிபத்தியவாதிகளின் நிர்ப்பந்தத்தினாலேயே விசயம் செய்துள்ளார்.

இந்தியா காஷ்மீரில் நடத்திய அடக்குமுறையை பயன படுத்திய அமெரிக்க ஆளும் வர்க்கமானது, ''மனித உரிமை மீறல்'' குறித்து இந்தியாவை மிரட்டியது. ராவ் அமெரிக்கா செல்வதற்கு சில நாட்களுக்கு முன், பாகிஸ்தான் அணுவாயுத கட்டுப்பாட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்து இடுமாயின் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு எப்16 விமானங்களை வழங்கவுள்ளதாக இந்தியாவுக்கு எச்சரிக்கை விடுத்தது: அமெரிக்க ஆட்சியாளர் இந்திய அரசப் பிரதிநிதிகளுடன் அணுவாயுத கட்டுப்பாட்டு ஒப்பந்தம் பற்றி இரகசியப் பேச்சுவார்த்தையை லண்டனில் அவர்களை வரவழைத்து நடத்திவிட்டு வேண்டுமென்றே அந்த இரகசிய பேச்சுவார்த்தை பற்றிய தகவல்களை செய்தித் தொடர்பு நிறுவனங்களூடாக அம்பலப்படுத்தினர்.

இந்தியா அணுவாயுத உற்பத்தி, பாவனை என்பனவற்றின் உரிமையை கைவிடுவதற்கு இணங்கினால், பாகிஸ்தான் அல்லது ஏனைய பகையாளி நாட்டிலிருந்து இந்தியாவுக்கு வரும் மிரட்டல்களிலிருந்தும் இந்தியாவை காப்பாற்றும் ஒப்பந்தமொன்றை ஏற்படுத்தவே அமெரிக்க ஆட்சியாளர் நெருக்குவாரம் செய்துள்ளனர்.

### அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முரண்பாடு

அனைத்துலக உற்பத்தி, அனைத்துலக உழைப்புச் சந்தை திறக்கப்பட்டதையடுத்து உருவாகியுள்ள மாற்றம் கண்டுள்ள உலக வர்த்தக சந்தையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு கிடைத்துள்ள பலவீன நிலையிலிருந்தும் மீட்சியடைய தமது இறந்தகால உரிமையான யுத்தபலத்தை பயன்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா இறங்கியுள்ளது. ''அணுவாயுத கட்டுப்பாடு'' என்பது எவ்வகையிலும் உலக அமைதிக்கான கருவி ஒன்றல்ல. அது முக்கியமாக தமது வரலாற்றுரீதியில் நாற்றம்கண்ட நிலையிலிருந்தும் மீள இராணுவபலத்தை பயன்படுத்துவதற்காக அமெரிக்க ஏகாதிபத்தியம் பயன்படுத்தும் கருவி ஒன்றே. ''மனித உரிமை'' பற்றிய கதையளப்பும் இதன் மறு அம்சமே.

### பறையடிப்பின் பின்னணியில்

நரசிம்மராவை அமெரிக்காவுக்கு அழைத்து, ஏகாதிபத்தியம் நடத்திய பேச்சுவார்த்தையில் அணுவாயுத உற்பத்தி, பாவனை உரிமையை தாம் கைவிடவில்லை என்றும், காஷ்மீர் விவகாரத்தை அனைத்துலகரீதியாக பிரபலப்படுத்த இடமளிக்கவில்லை என்றும் பறையடிக்க காங்கிரஸ் கட்சி தலைமை முன்வந்துள்ளது. அணுவாயுத கட்டுப்பாட்டுப் பிரச்சனையிலும் மனிதஉரிமை பிரச்சனையிலும் பகிரங்கமாக கீழ்ப்படிவதிலிருந்தும் நழுவிக் கொள்ள ராவோவினால் முடிந்தமைக்கு, இந்திய முதலாளித்துவத்தின் எந்தவொரு சக்தியும் காரணமல்ல என்பதை நாம் இவ்விடத்தில் மனங்கொள்ளல் அவசியம், நாம் இப்படி கருதல் அவசியம். ஏனெனில் இதற்கான ஒரு காரணம் இந்த பேச்சுவார்த்தைக்கான தயாரிப்பு நடைபெற்ற சமயத்தில், பாரதீய ஜனதாக் கட்சியும் இந்திய ஸ்டாலினிச கட்சிகள் இரண்டும் நடத்திய பிரச்சாரமே,''இந்தியா பலவீனமுற்றுள்ளதென ஆளும் காங்கிரஸ் கட்சி நினைத்தாலும் இந்திய மக்கள் அத்துணை பலவீனமுறவில்லை. அவர்களால் தமது சொந்தக் கால்களில் நிற்க முடியும்.'' என்றும் ''இந்திய சுயாதீனத்தினை காட்டிக் கொடுப்பதை நாம் முற்றாக எதிர்க்கிறோம்.'' என்று இந்திய ஸ்டாலினிஸ்டுகள் தொடர்ந்து கூறிவந்துள்ளனர்.

எனினும் அமெரிக்க ஏகாதிபத்தியம் தாம் நினைத்த விதத்தில் ராவோவை கீழ்ப்படுத்திவிட முடியாமைக்கு ''இந்தியாவின் சக்தி''யோ அல்லது ராவோவின் எந்தவொரு புத்திசாலித்தனமோ காரணமல்ல. உலக ஏகாதிபத்திய அமைப்பினுள் ஐரோப்பா, யப்பான் போன்ற போட்டிக் கூட்டாளிகளுடன் சேர்ந்து திட்டவட்டமாக அமெரிக்க ஏகாதிபத்தியம் பின்தள்ளப்பட்டுள்ளதே இதன் உண்மையான காரணம். உலக வர்த்தகத்தில் அமெரிக்காவின் மிக விரும்பத்தக்க நாடு என்ற தன்மையை சீனாவுக்கு இல்லாதொழிக்க கிளின்டன் ஆட்சி விடுத்த மிரட்டலை கடந்த சில மாதங்களுள் அவர் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டதன் மூலம் இது புலப்படுகிறது. இதன் மூலம் சீனாவுக்கு ஏதும் பொருளாதார தடை விதிக்கப்படுமாயின் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு யப்பான ஐரோப்பாவுடனான போட்டியுள் சீனாவையும் புகுத்துவதாலேற்படும் இழப்பு பற்றி அமெரிக்க ஆளும் வர்க்கப் பிரிவினரிடையுள் ஏற்பட்ட குழப்ப நிலை இங்கு முக்கியமானது.

தற்சமயம் அமெரிக்க ஏகாதிபத்தியம் ராவோவிடமிருந்து பெற்றுள்ள முக்கிய நிவாரணம் யாதெனில் — உலகம் பூராகவும் அணுவாயுத தடைபற்றிய ஏறபாட்டில் இந்தியா பாகிஸ்தானின் அணுவாயுத பாவனைபற்றிய பிரச்சனையை வேறுபடுத்த ராவோவின் இணக்கத்தை பெறுவதே ஆகும்.

### ஸ்டாலினிசமும் பீ.ஜே.பி.யும்

நாடெங்கும் தொழிலாள வர்க்கத்திற்கு எதிராகவும் அனைத்துலகரீதியிலான பேரம் பேசலுக்கும், இந்திய ஆளும் வர்க்கமானது கையாண்டுள்ள அணுவாயுத பலப்படுத்தல் நிலைப்பாட்டினை பாரதிய ஜனதா கட்சியும் இந்திய ஸ்டாலினிச கட்சியும் முன் எடுத்து பிரச்சாரம் நடத்தி முற்றாக ராவ் அரசாங்கம் செய்யும் தாக்குதலுக்கு எதிராக கிளர்ந்தெழும் குட்டிமுதலாளித்துவ மக்களை தடம் புரளச்செய்து தொழிலாள வர்க்கத்துக்கு எதிராக முதலாளித்துவத்தின் கீழ் அணிதிரட்டவே யாகும். அதற்காக அமெரிக்க எதிர்ப்புச் சுலோகத்தை பயன்படுத்த இவ்விரு சாராருமே பின்வாங்கவில்லை.

### ஐ.ஏ.எஸ்

இதே வேளையில் தற்போது ஏகாதிபத்தியத்தால் சுமத்தப்பட்டுள்ள சூத்திரத்தை நியாயப்படுத்தும் வகையில் அப்பணியை தோளில் சுமக்க வேறொர் கன்னை முன்வந்துள்ளது. அது ஏர்னஸ்ட் மண்டேலினதும் விக்கிரமபாகு கருணாரத்னவினதும் இந்தியக் கூட்டாளிகளான ஐக்கிய செயலாளர் குழுமத்தின் கிளையான இன்கிளாப் கம்யூனிஸ்ட் சங்ஸ்டான் (ஐ. ஏ. எஸ்) அமைப்பே அதுவாகும். அதன் முக்கிய அங்கத்தவனான அச்சின்வனாயின் மே 26ம் திகதி முதலாளித்துவ 'த இந்து' பத்திரிகையில் பின்வருமாறு எழுதியுள்ளான்.

''பூகோளரீதியில் நிராயுதபாணியாதல் அன்றி பிரதேசரீதியான நிராயுதபாணியாக்கல் நடவடிக்கை இடம்பெறலாகாதென சும்மா கூறுவது இந்திய வெளியுறவுக் கொள்கை, அணுவாயுதத் திணைக்களத்தினர் இருவருக்குமேயன்றி வேறெவராலும் ஒத்துப்போக முடியாத ஒன்றாகும். இத்தகைய உண்மையான சர்வ நிராயுதபாணியாக்கலுக்கு செயல்ரீதியில் செல்வதற்கு எதிராக அதுபற்றிய வாயடிப்பு எடுத்துக் காட்டாகும். அது (சர்வ நிராயுத பாணியாக்கல்) உண்மையில் நடக்கவேண்டுமாயின் அதாவது சகலரும் அதற்கு இணங்கிப்போகும் விதத்திலான அரைகுறை பட்சபாதமுள்ள நிராயுதபாணியாக்கல் தொடர்கள் பலவற்றை ஒன்றிணைத்து கொள்வதனூடாகவே சாத்தியமாகும்.''

இக்கூற்றும் நாம் முன்பு எடுத்துக்காட்டிய அமெரிக்க அரச திணைக்கள சூத்திரமான கொள்கைரீதியில் சர்வ நிராயுதபாணியாக்கலுக்கு இணக்கம். செயலளவில் பிரதேச நிராயுதபாணியாக்கலே''! என்றதற்குமிடையே உள்ள வேறுபாடு என்ன?

இந்திய பப்லோவாதிகள் நேரடியாக அமெரிக்க ஏகாதிபத்திய நிலைப்பாட்டை பேண முன்வந்துள்ளதையே இங்கு காணலாம். அச்சின்வனாயிக் அதே மூச்சில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மனிதஉரிமை இயக்கம் பற்றியதை நியாயப்படுத்துகிறான்.

இற்றைக்கு 40 ஆண்டுகளுக்கு முன் ட்ரொட்ஸ்கிசத்தை புரட்டி தொழிலாள வர்க்கத்தை பின்னடிக்கு தள்ளிய பப்லோவாதப்போக்கு தற்சமயம் முதலாளித்துவத்தின் இரண்டாவது வீழ்ச்சியுடன் ஏகாதிபத்தியத்துக்கு முற்றுமுழுதாக அனுகூலமாகியுள்ளதை காணலாம்.

இந்தியாவினுள் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட அமெரிக்க ஏகாதிபத்தியம் எடுக்கும் முயற்சிகளுக்கெதிராக தொழிலாள வர்க்கம் கிளர்ந்தெழ வேண்டும். அதே சமயம் தேசிய முதலாளித்துவத்தின் கையில் அணுவாயுதம் ஏந்துதலை நியாயப்படுத்த ஸ்டாலினிச, பீ.ஜே.பீ.யுடன் அணிதிரண்டிருப்பதையும் அதன் முயற்சிகளுக்கும் கூட அவ்வண்ணமே எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டும். இந்தியா, பாகிஸ்தான் இருநாட்டு முதலாளித்துவங்களின் கையில் அணுவாயுத குவிப்பிற்கு பலியாவது இரு நாட்டுத் தொழிலாள ஒடுக்கப்படும் மக்களேயாவர்.

உண்மையான நிராயுதபாணியாக்கல் என்பதற்கான அத்தியாவசிய நிபந்தனை யாதெனில் அணுவாயுத கட்டுப்பாட்டை தொழிலாளர் கையேற்பதேயாகும். இது முதலாளித்துவ தாக்குதலுக்கு எதிராக அனைத்துலக சோசலிச வேலைத்திட்டத்தின் கீழ் அனைத்துலகரீதியில் ஒருங்கிணைக்கப்பட்ட தொழிலாள வர்க்கம் தன் கையில் ஆட்சியை வென்றெடுப்பதால் மட்டுமே சாத்தியமாகும். அதாவது உலக சோசலிச புரட்சி வெற்றியீட்டுவதனால் மட்டுமே சாத்தியமாகும். இப்பணிக்கு இந்தியா, பாகிஸ்தானுள் புரட்சிக் கட்சியை கட்டியெழுப்புவதை தாமதப்படுத்த முடியாது,


பேர்ளின் உலகத் தொழிலாளர் மாநாட்டு விஞ்ஞாபனம்:

**ஏகாதிபத்திய யுத்தத்தையும் காலனித்துவத்தையும் எதிர்!**

(நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் விஞ்ஞாபனம்)

விலை— ரூபா 20



சோசலிச புரட்சியின் உலகக் கட்சியைக் கட்டி எழுப்பு!

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்!**

பெயர் ..................................................

முகவரி: ..................................................

..................................................

..................................................

தொலைபேசி இலக்கம்: ..................................

இப் பத்திரத்தை நிரப்பி அனுப்ப வேண்டிய முகவரி:

தேசிய செயலாளர்,
புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்
இல: 90, 1வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு - 10,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிராங்பேட் ஐரோப்பிய தொழிலாளர் மகாநாடு

# தொழிலாளர் வர்க்க அனைத்துலக ஐக்கியத்துக்கான முக்கிய நடவடிக்கை

(4ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் மாதங்களிலும் வருடங்களிலும் தொழிலாளர் வர்க்கம் அநேக போராட்டங்களில் ஈடுபடும். முழுப் பொருளாதார, சமூக அபிவிருத்திகள் அத்தகைய ஒரு முடிவினையே சுட்டிக்காட்டுகின்றன. ஆனால் அத்தகைய போராட்டங்கள் மட்டும் தொழிலாளர் வர்க்கத்தினுள் இருந்து வரும் தலைமை நெருக்கடியைத் தீர்த்துவிட முடியாது. இந்த விதத்தில் இத்தாலியின் வரலாறு போதிக்கின்றது. 1920ல் நாடு ஒரு பிரமாண்டமான வேலைநிறுத்த அலையினாலும் பக்டரி உள்ளமர்வு போராட்டங்களாலும் நிறைந்து போய்க் கிடந்தது. இலட்சோப லட்சம் தொழிலாளர்கள் இவற்றில் பங்கு கொண்டனர்: இந்த அபிவிருத்திகளின் தறுவாயில் அரசாங்கம் ஸ்தம்பித்துப் போயிற்று. சோசலிசக் கட்சியும் அதன் புரட்சிகர இடதுகன்னையும் பரந்த ஆதரவைக் கொண்டிருந்தது எவ்வாறெனினும் இந்த புரட்சிகர அணிதிரள்வுக்கு ஒரு முன்நோக்கினை வழங்க அவர்கள் இலாயக்கற்றவர்கள் என நிருபித்தனர். இதன் பெறுபேறாக வேலைநிறுத்தமும், உள்ளமர்வு இயக்கமும் களைத்துப் போயிற்று. அப்போது பாசிஸ்டுகள் எதிர்த்தாக்குதலில் ஈடுபட்டனர். 1922ல் மன்னன் தொழிலாளர்களின் பக்கத்தில் இருந்து ஒரு பிரமாண்டமான பிரதிபலிப்பு இல்லாமல் பெனிட்டோ முசோலினியை அரசாங்கத் தலைவனாகப் பிரகடனம் செய்ய முடிந்தது,

இதிலிருந்து கற்றுக்கொள்ளவேண்டிய படிப்பினை என்ன? தொழிலாளர் வர்க்கத்தின் தன்னியல்பான போராட்டங்கள் தலைமை நெருக்கடியை தீர்த்து வைக்கப் பங்களிப்பு செய்யுமா அல்லது அவை வெறுமனே தடுமாற்றங்களை உக்கிரமாக்கி தொழிலாளர்களை நிலைகுலைய வைக்குமா என்பது நாம் செய்பவற்றிலும் நாம் போராடும் முன்நோக்கிலுமே தங்கியுள்ளது என சுவார்ட் விளக்கினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: எமது புரட்சிகர உறுதிப்பாடு எதிர்காலப் போராட்டங்களின் தவிர்க்க முடியாமையினை அடிப்படையாகக் கொள்ளவில்லை. ஆனால் எமது கருத்துக்களின் பலம் எமது முன்நோக்கின் சக்தியினையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. இது ஒரு விஞ்ஞானரீதியில் வேரூன்றிய வேலைத்திட்டத்துக்காக உக்கிரமான முறையில் போராடினால் அது பரந்த மக்களின் மனங்களை எட்டவும் வெல்லவும் முடியும் என்ற திட நம்பிக்கையினை அடிப்படையாகக் கொண்டுள்ளது, ''இக்காரணத்துக்காக நாம் திரிபுவாதத்தினதும், மையவாதத்தினதும் சகல வடிவங்களுக்கும் எதிராக சமரசமற்ற போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். நாம் 'இடது ஐக்கியம்' என்ற சுலோகத்தினை நிராகரிக்கின்றோம். நாம் தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கியத்துக்கு ஆதரவானவர்கள். அது இதிலிருந்து சற்று வேறுபட்டதல்ல. இதற்கு நேர் எதிரானது.

''தொழிலாளர் வர்க்கத்தினை அனைத்துலகரீதியில் ஐக்கியப்படுத்த சமூக ஜனநாயகத்தினதும் ஸ்டாலினிசத்தினதும் தசாப்தகால தவறான போதனையினாலும், துரோகத்தினாலும் நடைமுறைக்கிடப்பட்ட தடுமாற்றங்களிலிருந்தும் நப்பாசைகளிலிருந்தும் தலையெடுக்க வேண்டும். தொழிலாளர் வர்க்கத்தை தொழிற்சங்க அதிகாரத்துவங்களதும், அதன் வேடதாரி எதிர்ப்புக்கள் வேறும் அடையாள நடவடிக்கைகளின் முட்டாள்களாக்கும் பிடியில் இருந்தும் விடுதலை செய்வது அவசியம். உண்மையில் போராடுவது எப்படி? அவர்களின் வெளிநாட்டு சகாக்களை காப்பதும், பாசிசத்தினதும் யுத்தத்தினதும் ஆபத்தினை எதிர்ப்பது எப்படி? என்பதையும் தொழிலாளர்களுக்கு காட்ட வேண்டும்.

''மத்தியதர வர்க்க தீவிரவாதிகள் இதன் எதிரிடையையே செய்கின்றனர். அவர்கள் அதிகாரத்துவ கருவிகளை வலம் வந்து கொண்டு அதன் இறுதிப் பாதுகாப்பு அணிகளாக சேவை செய்கின்றன. நாம் இதனை இத்தாலியிலும், ஸ்பெயினிலும், பிரான்சிலும் எமது வேலையின் போது பலமுறை கண்டோம். ஸ்பெயினில் அவர்கள் இஸ்குயிர்டா யூனிடா (The United Left) வைச் சூழ அணிதிரள்கின்றனர். இது ஸ்பெயின் ஸ்டாலினிசத்தின் ஒரு முன்னணி அமைப்பாகும். இவர்களின் வரலாறு தொழிலாளர் வர்க்கத்தினை இரத்தம்தோய ஒடுக்குவதில் ஆழமாக வேரூன்றியுள்ளது. இத்தாலியில் இவர்கள் பழைய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு கன்னையான ரிபன்டசியோன் கம்யூனிஸ்டாவுடன் அணிதிரண்டுள்ளனர்.

இதில் ஏர்ணஸ்ட் மண்டேலின் நெருங்கிய அரசியல் சகபாடிகளில் ஒருவரான லிவியோ மைத்தானின் தலைமையிலான பப்லோவாத ஐக்கிய செயலகத்தின் ஆதரவாளர்கள் முன்னணிப் பாத்திரம் வகிக்கின்றனர்.''

மகாநாட்டில் இந்தியா, அவுஸ்திரேலியா, அமெரிக்காவின் ட்ரொட்ஸ்கிசக் கட்சிகளின் வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப்பட்டன. கூட்டம் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் ஐரோப்பிய விஞ்ஞாபனம், பால்கன் நெருக்கடி மீதான பிரேரனைகள், இனவாதம், யுத்தம், பாசிசத்துக்கு எதிரான போராட்டங்கள், நவ நாசிகளின் தாக்குதலுக்கு உள்ளான BSA மத்திய குழு உறுப்பினர் லுட்விக் நித்தமர், மேற்கு பேர்கினியா நிலக்கரி சுரங்கத் தொழிலாளி ஜெரிடோல்லோவ் தொடர்பான பிரேரணை ஏகமனதாக நிறைவேறியதுடன் முற்றுப்பெற்றது.

# பாசிசம் மீண்டும் எழுச்சி காண்பது ஏன்?

9ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று இந்த வரலாற்றின் படிப்பினைகள் என்ன? 1930 பதுகளில் போன்று இன்று முதலாளித்துவத்தின் நெருக்கடி திரும்பவும் பாசிசப் பிற்போக்கின் சக்திகளை முன்னணிக்குக் கொணர்ந்துள்ளது. 1930 பதுகளின் பின்னர் வேலையின்மை உச்சக் கட்டத்தினை எட்டியுள்ளதோடு ஐரோப்பாவினதும், அமெரிக்காவினதும் ஆளும் வர்க்கங்கள் நலன்புரி அரசினையும் தொழிலாளர் வர்க்கத்தின் சகல சமூகத் தேட்டங்களையும் அழித்தொழிக்கும் இலக்கிலான ஒரு சமூக எதிர்ப்புரட்சியில் ஈடுபட்டுள்ளன.

முதலாளித்துவ அரசாங்கங்கள் மீண்டும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தீவிர வலதுசாரி இனவாத, பாசிச இயக்கங்களின் பெருக்கத்தினை ஊக்குவித்துக்கொண்டுள்ளன. இன்று தொழிலாளர் வர்க்கத் தலைமையின் நெருக்கடி, பழைய தொழிலாளர் அதிகாரத்துவங்கள் தொழிலாளர்களின் நலன்களை பாதுகாப்பதாக இனியும் பாசாங்கு பண்ண முடியாத கட்டத்தினை எட்டியுள்ளது. உண்மையில் அவர்கள் சம்பள வெட்டு, வேலை துரிதப்படுத்தல், பெருமளவிலான வேலைநீக்கம், சமூக நலன்களின் அழிவுகள் போன்ற தாக்குதல்களைத் தன்னிச்சையாக முன்வந்து அமுல் செய்யப் பொறுப்பேற்றுள்ளனர்.

ஸ்டாலினிஸ்டுகளின் தசாப்தக் கணக்கான காட்டிக்கொடுப்புக்கள் சோவியத் யூனியனின் சரிவுடன் உச்சக் கட்டத்தினை அடைந்தது. கடந்த மாத இத்தாலியத் தேர்தல்களில் வேலையற்றோரில் பெரும் பகுதியினரும் தொழிலாளர்களில் பெரும் பங்கினரும் வலதுசாரிக் கூட்டரசாங்கத்துக்கு வாக்களித்துள்ளனர். ஏனெனில் ஜனநாயக இடது (PDS) என்ற ஸ்டாலினிசக் கட்சியின் தலைமையிலான இடதுசாரிகள் எனப்படுவோர். பெருமளவிலான வேலையின்மைக்கும் வறுமைக்கும் எதுவிதமான பதிலையும் முன்வைக்கவில்லை. இது கிறிஸ்தவ ஜனநாயக அரசாங்கத்தின் சிக்கன வேலைத்திட்டத்தினை ஆதரித்தது. ஸ்டாலினிசத்தினதும், சமூக ஜனநாயகத்தினதும் தொழிற் சங்கங்களதும் சீர்திருத்தவாத, தேசியவாத வேலைத்திட்டம் தொழிலாளர் இயக்கத்தினைக் குழப்பியடித்து அடியோடு ஸ்தம்பிக்கச் செய்துள்ளது.

### தொழிலாளர் வர்க்கத்தின் முன்னணிப் பாதை

அப்படியானால் பெரும் வேலையின்மைக்கும் வறுமைக்கும் பாசிசத்தின் வளர்ச்சிக்கும் எதிரான போராட்டத்தின் முன்நோக்கிய பாதை என்ன? தொழிலாளர் இயக்கத்தினை ஒரு தொழிலாளர் வர்க்க அனைத்துலகப் புரட்சிகர இயக்கமாக மீளக் கட்டியெழுப்புவதே.

1930பதுகளில் நான்காம் அகிலத்தினுள் அணிதிரண்ட ட்ரொட்ஸ்கிச இயக்கம், வெகுவிரைவில் ஏற்படப்போகும் இராணுவப் பெரும் தீயானது ஒரு ஏகாதிபத்திய யுத்தமாக விளங்கும் எனஎச்சரிக்கை செய்தது. ஹிட்லரினதும் முசோலினியினதும் இராணுவத் தோல்வி பாசிசத்தினை ஒழித்துக்கட்டிவிடாது என நான்காம் அகிலம் விளக்கியது. ஏனெனில் பாசிசம், முதலாளித்துவ நெருக்கடியினதும் சீரழிவினதும் மிகக் கெடுதியான வெளிப்பாடாகும். முதலாளித்துவத்தினை புரட்சிகரமானமுறையில் தூக்கிவீசி, சோசலிசத்தை ஸ்தாபிதம் செய்வதன் மூலம் மட்டுமே பாசிசக் காட்டுமிராண்டித்தனத்தின் அபாயத்தினை நீக்கமுடியும்.

இன்று இந்தத் தீர்க்கதரிசனமான எச்சரிக்கைகள் நிருபிக்கப்பட்டுள்ளன. ஐரோப்பாவின் தொழிலாளர்கள் மட்டுமன்றி அமெரிக்க, அனைத்துலகத் தொழிலாளர்களும் ஒரு வரலாற்றுச் சந்தியில் நின்றுகொண்டுள்ளனர். தொழிலாளர் வர்க்கம் ஒரு சக்திவாய்ந்த சமூக சக்தியாக தொடர்ந்து இருந்து வருவதோடு முதலாளித்துவ நெருக்கடி அதனைத் திரும்பவும் பெரும் போராட்டங்களுக்குத் தள்ளுகின்றது. ஆனால் இந்த மாபெரும் போராட்டங்கள் தன்பாட்டில் அடிப்படையான பிரச்சினையை — புதிய தலைமையினதும் புதிய போராட்ட வேலைத்திட்டத்தினதும் அவசியத்தினைத் தீர்த்து வைத்துவிடாது. இவற்றுக்காக நனவான முறையில் போராட வேண்டும்.

தொழிலாளர்கள் ஒரு புரட்சிகர வேலைத்திட்டத்தின் பின்னால் அணிதிரட்டப்படுவதோடு ஒரு அனைத்துலக சோசலிச முன்நோக்கினால் ஆயுதபாணியாக்கப்பட வேண்டும்.

புரட்சிகர அடிப்படையில் தொழிலாளர் இயக்கத்தினை மீளக்கட்டியெழுப்புவதற்கான அரசியல் அடிப்படையை, வேர்க்கஸ் லீக்கினாலும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினாலும் இன்று முன்னெடுக்கப்படும் ட்ரொட்ஸ்கிச இயக்கத்தின் மாபெரும் மரபுரிமைகளினுள் கண்டுகொள்ள முடியும். நான்காம் அகிலத்தின் வேலைத்திட்டம், கொள்கைகள், வரலாற்றினுள் தொழிலாளர்கள் பாசிசத்தின் தோல்விக்கும் சோசலிசத்தின் வெற்றிக்குமான தயாரிப்புக்கு வேண்டிய கசப்பான படிப்பினைகளை உள்ளீர்த்துக்கொள்ள முடியும்.

கொழும்பு — 10. 1ஆவது மாளிகா[illegible] வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால்
மஹரகம நாகஹவத்தை வீதி, [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூ.என்.பி.—பொதுஜன முன்னணி வம்பளப்பு விஞ்ஞாபனங்கள் வெளிவந்துள்ளன

1ம் பக்கத் தொடர்ச்சி


நெருக்கடியில் தலைமூழ்கி வரும் ஏகாதிபத்தியவாதிகளின் புதிய நலன்களினாலேயே தீர்மானம் செய்யப்படுகின்றது. இலாப வீதத்தினைக் காக்கும் பெரும் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள ட்ரான்ஸ் நஷனல் கம்பனிகள் ஏகாதிபத்திய நாடுகளிலும் தொழிலாளர்களின் தொழில், நலன்புரி சேவைகளை நாசமாக்கி வருவதோடு, பின்தங்கிய நாடுகளில் காட்டு மிராண்டிச் சுரண்டலுக்கான நிலைமைகளைச் சிருஷ்டிக்கும் தாக்குதல்களில் இறங்கியுள்ளன. தொழில்நுட்பத்தின் புதிய அபிவிருத்திகளைப் பயன்படுத்தி ஏகாதிபத்தியக் கம்பனிகள் இலாப மான உழைப்பையும், மூலப் பொருட்களையும் தேடி நாட்டுக்கு நாடு தாவிப் பாய்ந்து வருகின்றன. இப்போது காலனித்துவத்தினதும் உலகத்தைப் பங்குபோடும் மூன்றாம் உலக யுத்தத்தின் அச்சுறுத்தலும் வளர்ச்சி கண்டு வருகின்றது. யூ.என்.பி.யினதும் சி.ல.சு.க. தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணியினதும் வேலைத்திட்டம், ஏகாதிபத்திய வாதிகளின் இந்தத் தாக்குதலை இலங்கையினுள்ளே கட்டவிழ்த்து விடும் அலுகோசு வேலைத்திட்டமேயாகும்.

யூ.என்.பி.யின் மூலம் இலங்கை முதலாளி வர்க்கம் எதற்காக தேர்தலுக்கு அழைப்பு விடுத்துள்ளது என்பதை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் 'தேர்தல் விஞ்ஞாபனமும் வேலைத் திட்டமும்' பின்வருமாறு குறிப்பிடுகின்றது: "இந்த முதலாளித்துவக் கட்சிகள் தேர்தலை மோசடிகள், கதையளப்புக்கள், வெளிப் பூச்சுக்கள் மூலம் குழம்பிப் போயுள்ள மத்தியதர வர்க்கப் பகுதியினரைத் தமது கட்சிகளைச் சூழ அணிதிரட்டிக் கொண்டு, அரசியல் அதிகாரத்துக்குப் பாய்ந்து கொள்வதன் மூலம் மிலேச்சத் தாக்குதல்களினால் திரும்பவும் பொறுமை இழந்து போயுள்ள தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்கள் மீது பாசிசத் தாக்குதல்களைக் கட்டவிழ்க்கப் பயன்படுத்த உள்ளன. அதன் மூலம் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத் தாபனங்களின் மிலேச்சச் சுரண்டலுக்கான நிலைமையை மேலும் மேலும் உத்தரவாதம் செய்ய முயல்கின்றன."

இன்று வளர்ச்சி கண்டு வருவது இந்த நிலைமை அல்லவா?

இலங்கை முதலாளிகள் தேர்தல் புகை மண்டலத்தின் ஊடாக ஜே.வீ.பி.யையும் அதனுடன் சேர்ந்த 'தேச மீட்பு முன்னணி'யையும் ஊதிப் பெருப்பித்துக் காட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். தேர்தல் ஆணையாளரும் சட்ட மா அதிபரும் ஜே.வீ.பி. தேர்தலில் தலையிட எதுவிதமான தடையும் கிடையாது என அறிவித்தனர். ஜே.வீ.பி.யை அழைத்துள்ளதன் நோக்கம், அதற்கு ஜனநாயக உரிமைகள் வழங்குவதற்கு அல்ல. முதலாளித்துவ பொதுஜன ஐக்கிய முன்னணி ஜே.வீ.பி.க்கு வெள்ளைச் சுண்ணம் தடவ யூ.என்.பி.யுடன் போட்டியிட்டுக் கொண்டுள்ளது. விஜய குமாரணதுங்கவைக் கொன்றது ஜே.வீ.பி. காரர்களே என கூறிவந்த அவரின் மனைவியான சந்திரிகா குமாரணதுங்க இப்போது அது அப்படி அல்ல என இராகம் இசைப்பது சும்மா அல்ல. யூ.என்.பி., பொது முன்னணி – இரண்டு முதலாளித்துவக் கும்பல்களும் தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிராகக் கட்டவிழ்த்துவிட ஜே.வீ.பி.யையும் மற்றும் மத்தியதர வர்க்கச் சக்திகளையும் பாசிசக் கும்பல்களாக சேவைக்கு அழைக்க தருணம் பார்க்கின்றன.

தமது வேலைத்திட்டம் ஏகாதிபத்திய முதலீட்டுடன் இணைந்து கொள்வதே எனவும் யூ.என்.பி, சி.ல.சு.க.வுடன் இணைந்தோ அல்லது தனித்தோ இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்கத் தயார் எனவும் ஜே.வீ.பி. காட்டிக்கொண்டுள்ளது இந்நிலையிலேயே. ஜூலை 20ம் திகதி ரூபவாஹினியில் உரை நிகழ்த்திய ஜே.வீ.பி. தலைவரான அஜித் குமார "வெளிநாட்டு முதலீடுகளை நிபந்தனையுடன் தருவிக்க" ஜே.வீ.பி. அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றார். ஜே.வீ.பி. பத்திரிகையான 'ஹிறு' (1994 ஜூலை 17) அரசாங்கத்தினுள் நுழையும் தமது உஜார் நிலையை பின்வருமாறு விளக்கியது: "ஜே.வீ.பி., பொது முன்னணிக்குள் சேர்ந்து கொள்ள இருந்த சகல சந்தர்ப்பங்களையும் தவிர்த்துவிட்டுதமது முதலாளித்துவச் சார்பு வேலைத்திட்டத்தை உறுதி செய்ய சி.ல.சு.க. நடவடிக்கை எடுத்தாலும் பொதுத் தேர்தலில் தேசத்தை மீட்கும் முன்னணியின் ஆதரவைப் பெறாமல் அவர்களால் அரசாங்கத்தை அமைக்க முடியாது..."


பு.க.க. தேர்தல் விஞ்ஞாபனத்தை வாசித்தறியும் ஊவாபரணகம ஆஸ்பத்திரி ஊழியர்கள்

தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக இராணுவ–பொலிஸ்–குண்டர்–பாசிஸ்டுகளின் ஆபத்து வளர்ச்சி கண்டு வருகின்றது. யூ.என்.பி. நடைமுறைக்கிடும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் மிலேச்ச அடக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் எதிராக பொது மக்களிடையே பரந்த அளவில் வளர்ச்சி காணும் பதட்ட நிலையை நசுக்குவது சகல முதலாளித்துவக் கட்சிகளதும் அவசியமாக உள்ளது.

தேர்தல் பிரகடனம் வெளியானதும் முதலாளித்துவக் கட்சிகள் பயங்கரமான வன்முறைகளை படிப்படியாகக் கட்டவிழ்த்துக் கொண்டுள்ளன. பொதுத் தேர்தல் முடிந்தவுடன் ஊரடங்குச் சட்டத்தை பிரகடனம் செய்ய முடிவு செய்துள்ள அரசாங்கம், முன்னொருபோதும் இல்லாத விதத்தில் இப்போதே ஊரடங்கு அனுமதிப் பத்திரங்களைத் தமது குண்டர்களுக்கு வழங்குவதற்காக பல்வேறு பொலிஸ் நிலையங்களுக்கும் அவற்றை அனுப்பிவைக்க முடிவு செய்துள்ளது. இதற்கிடையே முதலாளித்துவ பொதுஜன முன்னணியின் இராணுவ-குண்டர் நிழலாட்டமாக இருந்துவந்த மாஜி பொலிஸ்–இராணுவ தலைவர்களைக்கொண்ட "அமைதி காக்கும் படை" தயாராகி வருவதாகவும் முதலாளித்துவப் பத்திரிகைகள் குறிப்பிட்டுள்ளன. ஆட்சிக்கு வரும் எந்தவொரு அரசாங்கமும் சரி பிரமாண்டமான வன்முறையின் மூலம் தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்களை நசுக்கித் தள்ள ஆயத்தமாகி வருவதை இது காட்டுகிறது.

## வன்முறைக்கு முத்தாய்ப்பு

இத்தகைய வன்முறைகளுக்கு முத்தாய்ப்பு வழங்கத் தாம் தயார் என அனைத்துலக பப்லோவாதிகளின் இலங்கை அமைப்பான நவசமசமாஜக் கட்சி காட்டிக் கொண்டுள்ளது. ஜே.வீ.பி.யுடன் இணைந்துகொள்ளத் துடித்துக் கொண்டுள்ள இந்தக் கட்சி 'ஹரய' பத்திரிகையில் பின்வருமாறு கூறுகின்றது: "இதற்கிடையே ஜே.வீ.பி. இயங்கத் தொடங்கியதோடு அந்தச் செயற்திறனாளர்கள் நவசமசமாஜக் கட்சியுடன் சேர்ந்து மக்கள் தலையீடுகளினுள் எந்த விதத்தில் செயற்படுகின்றார்கள் என்பதை பாதுகாப்பு துறையினர் ஆராயத் தொடங்கியுள்ளனர் என்றது."

இந்த மக்கள் தலையீடுகளின் இலட்சணம் என்ன? தேர்தலின் பின்னணியில் யூ.என்.பி.–சி.ல.சு.க. காரர்களை வீதிகளில் இறக்கும் எந்தவொரு ஆத்திரமூட்டும் இயக்கத்தையும் 'மக்கள் போராட்டம்' (ஜன அரகலய) எனப் பேர் சூட்டி அவற்றில் சேர்ந்து கொள்ள நவசமசமாஜ கட்சி துடிதுடித்துக் கொண்டுள்ளது. 1987ல் ஜே.வீ.பி.யின் பாசிச இனவாத கிளர்ச்சிகளை 'ரன்தொலி பெரஹர' எனப் பேர் சூட்டியவர்கள் இக்கட்சியினரே. நவசமசமாஜக் கட்சியின் ஏகாதிபத்திய சார்பு பற்றி நாம் தொழிலாளர்களையும் ஒடுக்கப் படும் மக்களையும் எச்சரிக்கின்றோம்.

முதலாளித்துவக் கட்சிகளின் பொய் தேர்தல் விஞ்ஞாபனங்களை நிராகரிக்கும்படி நாம் வேண்டுகின்றோம். பதுளை மாவட்டத்தில் சுயேட்சை குழு இலக்கம் 1 ஆக தேர்தலில் நிற்கும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாளர் வர்க்கம், ஒடுக்கப்படும் மக்கள் முன்னிலையில் தனது புரட்சிகர வேலைத் திட்டத்தினைச் சமர்ப்பித்துள்ளது. பு.க.க.வின் சுயேட்சைக் குழு வேட்பாளர்களுக்கு வாக்களிப்பதன் மூலம் தொழிலாளர் வர்க்கத்தின் சுயாதீன புரட்சிகர வேலைத்திட்டம் தொடர்பான உங்களின் அங்கீகாரத்தை தெரிவிக்கும்படி நாம் பதுளை மாவட்டத் தொழிலாளர் ஒடுக்கப்படுவோர், இளைஞர்களை வேண்டுகின்றோம். ஏனைய மாவட்டங்களில் இம்மக்கள் வாக்களிக்கக் கூடிய எந்தவொரு கட்சியும் இல்லை. பு.க.க. வேலைத் திட்டத்தை ஆழமாக ஆய்வு செய்யும்படி நாடு பூராவும் உள்ள தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை நாம் வேண்டுகின்றோம்.

ஆட்சிக்குவரும் எந்தவொரு அரசாங்கமும் சரி எதிர்வரும் ஒரு சில மாதங்களுள் ஏகாதிபத்திய இரத்தப் புடையன்களாகத் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான தாக்குதலை மேலும் மேலும் உக்கிரமாக்குவது நிச்சயம். அந்தத் தாக்குதலுக்கு முகம் கொடுத்து அதைத் தோற்கடிக்கும் பொருட்டு சோசலிச அனைத்துலகவாத வேலைத் திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர் வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்டுவது தீர்க்கமானது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அப்போராட்டத்தின் ஒரு பாகமாகவே இத்தேர்தலில் தலையிடுகின்றது.

பகிரங்க கூட்டம்

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கு வாக்களியுங்கள்**

- இனவாத யுத்தம், கிராமப்புற பயங்கரம், பாசிச ஆபத்துக்கு எதிராக
- தொழில், கல்வி, சேமநல உரிமைகளை உறுதி செய்வோம்!

யூ.என்.பி.–முதலாளித்துவ முன்னணி வேண்டாம்!
தொழிலாளர்–விவசாயிகள் அரசாங்கத்தை அமைப்போம்!
அனைத்துலக சோசலிசத்தை நோக்கி முன்னேறுவோம்!

ஆகஸ்ட் 5 காலை 10 மணி – வெலிமட

ஆகஸ்ட் 7 மாலை 2 மணி ஹாலிஎல பொது விளையாட்டு/மைதானம்

ஆகஸ்ட் 7 காலை 9 மணி வெலிமட அதியாரவத்த

ஆகஸ்ட் 11 மாலை 4.30 மணி பண்டாரவளை சந்தை மைதானம்

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்/இளம் சோசலிஸ்டுகள்**

**வாசியுங்கள் பு.க.க. தேர்தல் விஞ்ஞாபனம்**




விலை: ரூபா 4/- (தபால் செலவு உட்பட)

தொடர்பு: ஆனந்த வக்கும்புர,
90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை,
மருதானை, கொழும்பு–10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org